Registered as a News Paper பக்கங்கள் 12 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 01 [16-07-98] வெள்ளிக்கிழமை ஓசை 148

## இவ் வருட இறுதிக்குள் 3000 ஆசிரிய நியமனம்

இந்த வருட இறுதிக்குள் மேலும் மூவாயிரம் பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது. இவர்களில் 500 பேர் பட்டதாரி ஆசிரியர்களாகவும், 2500 பேர் ஏனைய தரங்களைச் சேர்ந்த ஆசிரியர்களாகவும் நியமிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. 1992 ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு முன் பட்டம் பெற்றவர்கள் பட்டதாரி ஆசிரிய நியமனங்களுக்கு விண்ணப்பிக்க முடியும். இவர்களைத் தவிர ஆங்கிலம், விவசாயம், மனையியல், கணித விஞ்ஞான (12ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திரக் கட்சியிலிருந்து அனுரா இடைநிறுத்தம்!

## கட்சி பிளவுறும் ஆபத்து

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். இது தொடர்பாக கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவருக்கு கடிதமூலம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பு விதிகளுக்கு உட்பட்டு கட்சித் தலைவிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலேயே சிறிமாவோ இம் முடிவை எடுத்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு அனுரா கட்சியிலிருந்து நீக்கப்பட்டதை அடுத்து நெருக்கடி நிலை அதிகரித்திருப்பதாகவும், கட்சி பிளவுறக் கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ராணுவம்மீது தாக்குதல்

செட்டிகுளம் பிரதான வீதிப் பகுதியில் மின்சார வேலையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

கடந்த செவ்வாயன்று காலை 8 30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தையடுத்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல் தாக்குதலும்மேற்கொண்டனர்

## முருங்கன் பகுதியில் விமானக் குண்டுவீச்சு

(மன்னார்)

மன்னார் மாவட்டம் முருங்கன் பகுதியில் இரு குண்டு வீச்சு விமானங்கள் மக்கள் குடியிருப்புகள் மீது அடுத்தடுத்து குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

பின்னர் 5 20 மணியளவில் ஜீவநகர் விவசாயப் பண்ணை மீது நடைபெற்ற விமானத் தாக்குதலில் இரண்டு வீடுகள் தரைமட்டமாகின.

இராணுவம் கெடுபிடி

## வவுனியா நகர் செல்லாது பயணிகள் திரும்பினர்

தாண்டிக்குளம் பகுதியிலுள்ள இராணுவத்தினரின் கெடுபிடி நடவடிக்கையால் நேற்று பயணிகள் வவுனியா நகர் செல்லமுடியாது திரும்பினர்.

வட பகுதிக்கு வெளியே செல்லமுயன்ற பயணிகளை நொச்சிமோட்டை பாடசாலைக்கு அருகில் உள்ள ஒழுங்கையூடாகச் சென்று புகையிரத வீதிவழியாக வருமாறு இராணுவத்தினர் பணித்தபோது அவர்கள் செல்லாது திரும்பிவிட்டனர். 10 நிமிடத்திற்குள் தாம் அழைத்த பாதையூடாக செல்லவேண்டும் அல்லது திரும்பிச் சென்றுவிட வேண்டும் என இராணுவத்தினர் பணித்திருந்தனர்.

## மக்களிடம் நீதிகேட்க அனுரா முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா எடுத்த முடிவை மக்கள் முன் கொண்டு சென்று அவர்களின் தீர்ப்புக்கு விடப்போவதாக கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

தனக்கு சுதந்திரக் கட்சி (12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சிக்கு எதிராக செயற்படும் உறுப்பினர்மீது நடவடிக்கை

(கொழும்பு)

கட்சிக்கு உள்ளே இருந்து கொண்டு கட்சிக்கு எதிராக செயற்படும் உறுப்பினருக்கு எதிராக கட்சியின் கொள்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும். அவர் கட்சியில் எந்தப் பதவியை வகித்தாலும் அவருக்கு எதிராக நடவடிக்கைகளைஎடுக்க தாம் என்றும் பின்வாங்கப் போவதில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுராபண்டாரநாயக்கா இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து கருத்துதெரிவித்த சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்படிகருத்தைதெரிவித்தார் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்சுதந்திரக்கட்சியின் கொள்கையும், நலனும் மக்களின்விருப்பங்களும் நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கு அத்தியாவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியது தவிர்க்க முடியாதது. இதன் அடிப்படையில் இம் முடிவு எடுக்கப்பட்டது என்றார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

# சட்டவிரோத குழுக்களின் ஆயுதம் களைய உத்தரவு

(கொழும்பு)

சிறிலங்காவின் ஆயுதப்படையினரும் பொலிஸ் படையினரும் தவிர்ந்த எவரும் ஆயுதங்களை வைத்திருப்பது, எடுத்துச் செல்வது சட்டரீதியாக தடைசெய்யப்படும் என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார். அவ்வாறு சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருப்போர் அல்லது கொண்டு செல்வோர் மீது வழக்கு தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந் நடவடிக்கையின் கீழ் சகல தனிப்பட்ட இராணுவ அமைப்புகளும் கலைக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சட்டரீதியற்ற பல ஆயுதக் குழுக்கள் தாம் வைத்திருக்கும் ஆயுதங்களை துஷ்பிரயோகம் செய்வது தெரியவந்ததையடுத்தே இந்நடவடிக்கை என தெரிவிக்கப்படுகிறது

இவ்வாறான சட்டரீதியற்ற குழுக்களின் செய்கை நிறுத்தப்படும் எனவும் அரசியல் வாதிகளுக்கான பாதுகாப்பை பொலிசார் மட்டுமே வழங்குவர் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## 41தமிழ் இளைஞர் சிறையிலிருந்து விடுவிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப் பட்டிருந்த 41தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர். இந்த 41 பேரும் வடக்கு கிழக்குப் பகுதியை சேர்ந்தவர்கள்.

இவர்கள் எப்போது, எங்கு கைது செய்யப்பட்டனர் என்பது உடனடியாக தெரியவில்லை என்று கைதிகளை அவர்களது உறவினரிடம் ஒப்படைத்த கைதிகள் புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா கூறினார்

இவர்களில் எட்டுப் பேர் நேற்று வவுனியா ஊடாக வடபகுதி வந்து சேர்ந்தனர்.

## யாழ். கரையோரம் நோக்கி துப்பாக்கிச் சூடு; ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையில் இன்று அதிகாலை ஒரு மணியளவில் பலத்த துப்பாக்கிச்சூட்டுப் பரிமாற்றம் இடம்பெற்றது. நீண்ட நாள்களுக்குப் பின்னர் கல்முனை, மாண்தீவு, மண்டைதீவு, அராலித்துறை ஆகிய பகுதிகளிலிருந்து பலத்த 50 கலிபர் தாக்குதலும் எறிகணைத்

( 11 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ தேசியக்கொடி ஏற்ற சிங்க கொடியை எரித்தவன்

## லெப். சீலன் நினைவில் கரிகாலன் உரை

(தென்மராட்சி)

அவன் பிறந்த மண்ணிலே தமிழீழ தேசியக் கொடியை ஏற்றுவதற்காக சிங்கக் கொடியை எரித்தவன். இந்த மண்ணில் தோய்ந்த செந்நிறக் குருதியில் இப் பூங்காவை அமைத்துள்ளோம். இவ்வாறு தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் அவர்கள் 1983ஆம் ஆண்டு மீசாலையில்சிறிலங்கா இராணுவத்தின் சுற்றிவளைப்பில் வீரச்சாவு அடைந்த லெப் சீலன், வீரவேங்கை ஆனந் ஆகியோரின் 10 ஆம் ஆண்டு நினைவையொட்டி இடம்பெற்ற பூங்கா திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் வன்னி மாவட்ட அரசியல்நிர்வாகபொறுப்பாளர் மனோ பேசுகையில்; தமிழீழ இலட்சியத்திற்காக விடுதலைப்புலிகளுடன் ஆரம்பப் போராளியாக தம்மை இணைத்துக்கொண்டவர்கள் லெப். சீலன், வீரவேங்கை ஆனந் இருவரும் விடுதலைப் பயிருக்கு உரமானவர்கள் எம் தேசிய தலைவரோடு தோளோடு தோள் கொடுத்து போராட்டத்தை வளர்த்தவர்கள் என தெரிவித்தார்.

தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் கந்தண்ணா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஈகைச்சுடரை திருமலை மாவட்ட துணைத் தளபதி மது ஏற்றினார். நினைவுபூங்காவினைவிடுதலைப்புலிகள் மூத்த உறுப்பினர் திரு. பொட்டம்மான் திறந்து வைத்தார். நினைவு மண்டபத்தை தமிழீழ அரசியல் துறை உதவிப் பொறுப்பாளர் கரிகாலன் திறந்துவைத்தார். உருவப் படங்களுக்கு ஈகைச்சுடரை திரு. யோகி ஏற்றி வைத்தார். தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன். தியாகம் உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்தார்.

இந்நிகழ்வில் மூத்த உறுப்பினர்திரு தேவர், திரு யோகி, மகளிர் அமைப்பின் சார்பில் செல்வி வெண்ணிலா ஆகியோரும் உரையாற்றினர். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் இளம்பரிதியும் கலந்துகொண்டார். தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (86)

## வரி விளம்பரம்

**உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள், றேடியோக்கள்**

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஒட்டோமற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். விற்கப்படும். டில்காவாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி. ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம் (சி-6931)

### சனிவக்கிரம்
[அக்டோபர்வரை]

(பொருளாதார, போக்குவரத்துத் தடைகள், யுத்த நிலைகள் நீடிக்கும்.) விஞ்ஞானரீதியாக ஜாதகங்களின் கணிப்புகளுக்கும், விவாகப் பொருத்தங்களுக்கும், எண்ஜோதிட, கைரேகை சாஸ்திரத்திற்கும், நேரில் சந்திக்கலாம். ''சதியா'' (இடி குண்டருகாமை, கட்டுடை. (5384)

### முதலாம்பிள்ளை
'இன்று தமிழில் வானொலி நாடகம் எழுதுபவர்களில் தலை சிறந்தவர் என்று, விமர்சகர் K S. சிவகுமாரனால் பாராட்டப்பட்ட அராலியூர் ந சுந்தரம்பிள்ளையின் முதலாம்பிள்ளை 30/-.ஒரேயொரு வானொலி நாடகநூல். (4095)

### தவறிவிட்டது
க. மார்க்கண்டு என்பவரின் கொழும்பு வர்த்தக வங்கி காசோலை (2120/-) இணுவில்- கோண்டாவிலுக்குஇடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். ஆஸ்பத்திரி காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5389)

### வியாபாரிகட்கு
தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள், லேஸ், நூல் வகைகள், எவர்சில்வர் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருள்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக் கொள்ள-ஜெயா அழகுசாதன மாளிகை, 177-A, மின்சார வீதி, யாழ்ப்பாணம். (சி-6968)

### வைத்திய சேவை
இரெட்ணம் வைத்திய சாலை 129, ஸ்ரேஷன் றோட் யாழ்ப்பாணத்தில் சகல நோய்கட்கும் நவீனமருத்துவமுறைப்படி சிகிச்சையை வழங்குகிறது இரவு பகல் சேவையுடன் அவசர நோயாளர் தங்கும் வசதியும் உண்டு நிர்வாகி ''இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவக் கலாநிதி'' க. இராசரெட்ணம். (5285)

ஆடிக்கூழ்
தேடிக்குடியுங்கள்
இது சான்றோர் வாக்கு

**இது ஜோ. எகட்டனின்**
**ஜெசித்தாராவில்**
**இன்று**
**நிதர்சனம் ஆகிறது.**

எமது வழமையான
வாடிக்கையாளர்களுக்கு
ஆடிக்கூழ் இலவசமாக
இன்று வழங்கப்படும்.
மற்றவர்களுக்கும் .........
வந்து பாருங்களேன்
மிச்சம்......சொச்சத்தை

ஜோ. எகட்டனின்
**ஜெசித்தாரா**
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி.
(சி/7018)


## நினைவு கூருகின்றோம் ... 1993-07-16

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் பெருவெளியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **ஜெய்சங்கர்** (— — இருதயபுரம், மூதூர் - திருமலை)
★ **இராசநாயகம்** (-மணற்சேனை-திருமலை)
★ **சின்னத்துரை குணநாயகம்** [— — பெரியவெளி, மூதூர்-திருமலை]
★ **மு. அருளம்பலம்** (-பெரியவெளி, மூதூர்-திருமலை)

திருமலை-மூதூர் - மல்லிகைத்தீவுப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் முகாமொன்றை முற்றுகையிட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டு வீரச்சாவெய்திய,

★ **கோணாமலை இராசநாயகம்** (மல்லிகைத்தீவு, மூதூர்-திருமலை)

மணலாறு-நெடுங்கேணிப் பகுதியில சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய,

**லெப், ராஜ்குமார்** (சூசைப்பிள்ளை ஆசீர்வாதம்-மணற்குடியிருப்பு-முல்லைத்தீவு)
**சசி** (விசுவநாதன் சிவலிங்கநாதன்-வவுனிக்குளம், மாங்குளம்-முல்லைத்தீவு)

திருமலை-மூதூர்ப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடடுக்கொல்லப்பட்ட குழந்தைகள், பெணகள், மற்றும் இடம்பெயர்ந்தோரான 30 பேர் உட்பட மணற்சேனை, பச்சைனூர், பெருவெளிப் பகுதிகளைச் சேர்ந்த 67 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு யாழ்-சுழிபுரத்தில் இந்தியப்படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் காசிம்** (பிரான்சிஸ்பிள்ளை ஜெகநாதன்-முருங்கன்-மன்னார்)

இதேதினம் வீரச்சாவெய்திய,

**மோகன்** (— — கிளிநொச்சி)
**சுமன்** (குமாரசாமி சந்திரசேகர்-கிளிநொச்சி)

கிளிநொச்சி செல்வநகரில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதச் சக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஜெயக்கொடி** (நாராயணபிள்ளை ஜெயச்சந்திரன்-செல்வநகர்-கிளிநொச்சி)

அம்பாறை-பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏத்தம் பகுதியில் தேசவிரோத சகதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **ஜெயா** (க. ஜெயசீலன் பொத்துவில்-அம்பாறை)

அம்பாறை-றொட்டைப்பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழ் விவசாயிகள்.

1989ஆம் ஆண்டு அம்பாறை- 35ஆம் கிராமம் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**தயாளன்** (கணபதிப்பிள்ளை கோபாலரத்தினம்-துறைநீலாவணை-மட்டு)
**சீராகரன்** (— — நீலாவணை-மட்டு)
**ஈஸ்வரன்** (— — ஆரையம்பதி-மட்டு)

1990ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**குணம்** (செல்வரத்தினம் சுரேஷ்குமார் - ஐந்துவேம்படி, தாவடி தெற்கு - யாழ்.)

யாழ் கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**லெப். ஜிம்பிறவுண்/சின்னவன்** [பரராசசிங்கம் மகேந்திரன் - மகேந்திராவீதி - யாழ்ப்பாணம்]

மட்டு - பாலையடிவெட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய -

**லெப். கேணல் ரீகன்** [இராசையா சிற்றம்பலம் - வெல்லாவெளி - மட்டு.]

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சேனைக்குடியிருப்பு - 01ஐச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

மட்டு - மகிழடித்தீவுப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்.

1991ஆம ஆண்டு மணலாற்றில் எமது முகாமை நோக்கி வந்த சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். யோகராசா** [கந்தையா நாகேந்திரம் - 2-ம் குறிச்சி, பழுகாமம் - மட்டு.]
**ராமராஜ்** [பேரின்பம் கணேசமூர்த்தி - காந்திபுரம், பழுகாமம்- மட்டு.]
**சூரன்** [சிவலிங்கம் குமார் - கிருஷ்ணன் கோவிலடி, கிரான் - மட்டு ]
**கப்டன் கிளாஸ்மிக்கோ** [பேரின்பராசா ஜீவானந்தராசா - கிளிவெட்டி, மூதூர் - திருமலை]
**2-ம் லெப். கௌரிகரன்** [யோகராசா மகேந்திரன் - கோபாலபுரம் - நிலாவெளி - திருமலை]
**லெப். நிக்சன்** [ஜெயபாலன் அன்னராசா - 10-ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு - மணலாறு]
**கனகசபாபதி** [பாண்டியன் நாகேந்திரம் - கள்ளப்பாடு-முல்லைத்தீவு]
**மேஜர் வீமன்** [உ. சோலை விக்கினேஸ்வரன் - சகாயவதி, அடம்பன் - மன்னார்]
**கப்டன் இளங்கோ** [கனகராசா ஜெயந்தன் - பாரதிவீதி, கம்பர்மலை - வல்வெட்டித்துறை]
**தியாகலிங்கம்/சூட்டி** [நாகலிங்கம் ஜெயலிங்கம் -மூளாய், சுழிபுரம் - யாழ்.]
**கட்டப்பொம்மன்** (மரியாம்பிள்ளை இராசன் - 11-ம வட்டாரம், நெடுந்தீவு - யாழ்.)
**மூர்த்தி** (தம்பிராசா அனிதராசா - வராத்துப்பளை - பருத்தித்துறை)

யாழ். வடமராட்சி, பொலிகண்டியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

**தைரியம்** (நடராசா ஆனந்தராசா - தொற்றாவத்தை, பொலிகண்டி - வல்வெட்டித்துறை)
**வேல்ராஜ்** (அலுக்காஞ்சி வின்சன்ட் அமலதாஸ் - பலாலி - யாழ்.)

ஆனையிறவு முகாம் தகர்ப்பு முயற்சியாக வெற்றிலைக்கேணியிலிருந்து கட்டைக்காட்டுக்கு முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய -

**ராவ்** (சின்னையா மோகேஸ்வரன் - எருவில், களுவாஞ்சிக்குடி - மடடு)
**கப்டன் கில்** (சண்முகம் தபேந்திரன் - செல்வபுரம்வடக்கு மாங்குளம் - முல்லைத்தீவு)
**மேஜர் யாசின் யாசீர்** (கந்தசாமி சிவதாஸ்சின்னப்பொடி -மிருசுவில், கொடிகாமம் - யாழ்.)
**கப்டன் டயஸ்** (ஜஸ்ரின் றோய்பேபியன் - கரம்பொன், ஊர்காவற்றுறை - யாழ் )
**லெப் யூசி** (ஆறுமுகம்பிள்ளை சிறிசுந்தரம் ஏ. ஜி ஏ. ஒழுங்கை - வல்வெட்டித்துறை)
**லெப். வினோத்** (மோகனதாஸ் சுரேஸ் நிரஞ்சன் - கேணிப்புலம், மயிலிட்டி, காங்கேசன்துறை -யாழ்.)
**2 ம் லெப். மௌனி** [தாமோதரம்பிள்ளை மணிவாசகன் - கொக்குவில் கிழக்கு - யாழ் ]
**2-ம் லெப். சங்கர்** [வடிவேல் ஜெயந்திரன் - நாவற்குழி சந்தி, கைதடி - யாழ் ]
**2-ம் லெப். காண்டீபன்** [வைரவப்பிள்ளை உமாநேசன் - உடுத்துறை, தாளையடி - யாழ் ]
**விக்கினேஸ்** (பாலசிங்கம் பால்மருகன் -வட்டுக்கோட்டை கிழக்கு .யாழ்.)
**விசித்திரன்** (நிற்சிங்கர் வல்லிபுரநாதன் - தட்டான்குளம் வீதி, சாவகச்சேரி)
**அஜந்தன்** (அல்போன்ஸ் சேகர் - மெமோறியல் வீதி, மானிப்பாய்-யாழ்.)
**சதீஸ்** (தம்பையா யோகநாதன் - வரணி, கொடிகாமம் - யாழ் )
**குமரப்பா** (பாலசுப்பிரமணியம் சிவபாலன் - பன்னாலை, தெல்லிப்பழை - யாழ்.)
**சுகந்தன்** (பூபாலசிங்கம் பூலோகச்சந்திரன் - ஆசிமரத்தடி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு-யாழ்.)
**சிறிரங்கன்** (யோகதாஸ்நேசராஜா - துன்னாலை வடக்கு, கரவெட்டி - யாழ் )
**புஸ்பன்** (நாகராசா குலேந்திரன் - நாவற்குழி தெற்கு, கைதடி - யாழ் )
**யசோ** (லோகேஸ்வரன் சுதாகர் - 614 மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் - யாழ் )
**அனுஷன்** (தேவசகாயம் குணசிங்கம் - 60/3, டேவிற் வீதி, குருநகர் - யாழ்.)
**பப்பா** (செல்வம் கணேஸ் - 52, கமால் ஒழுங்கை - யாழ்ப்பாணம்)

**துணைப்படைவீரர்;**

**குட்டி** (கணேசலிங்கம் சபேசன் - மூத்தவிநாயகர் வீதி, நல்லூர் - யாழ் )

இதே சம்பவத்தில் எமைப்பிரிந்த நாட்டுப்பற்றாளரான;

**குயிலன்** (இரத்தினம் வர்ணகுலசிங்கம் - ஊறணி, வல்வெட்டித்துறை - யாழ்.)

மட்டு/பழுகாமம் கொக்கட்டிச்சோலை - வவுணதீவு உன்னிச்சை 9ஆம்கட்டை முகாம்களிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் சாமந்தியாறு, நெல்லிக்காடு. பாலம்போட்டமடு, உப்புக்குளம் கிராமங்களைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர். இந்நடவடிக்கையில் இராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டதில் சிறுவன், பெண், இளைஞன் உட்பட கொல்லப்பட்ட 06 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகிறோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/7015)

## 2-ம் ஆண்டு நினைவாக .

பிறப்பு: 02 - 12 - 1975



வீரச்சாவு: 16 - 07 - 1991

### லெப். வினோத்

(மோகனதாஸ் சுரேஸ்நிரஞ்சன்)
மயிலிட்டி

தாயகம் மீட்டிடும் காவியத் தலைவனின்
தானையில் வேங்கையாய் தாவிய வீரனே!
எல்லையை மீறிய எதிரியை வீழ்த்திட
எரிமலை யாகியே எழுந்தநம் வீரனே !
விடுதலை விடுதலை விடுதலை என்றுமே
வீசிடும் காற்றுடன் வீசிய வீரனே
களத்தினில் ஆடியே காவிய மானாய்
கண்களில் ஆடியெம் நெஞ்சினில் வாழ்வாய்;

என்றும் உம் நினைவுடன் வாழும்

மயிலிட்டி. உற்றார், உறவினர்கள்

(5390)

# பூநகரிப் பாதை விவகாரமும் ஐ. நா. தூதரகத்தின் ஒப்பந்தமும்

தனது குடிமக்கள் எனக் கூறிக்கொள்ளும் ஒரு மக்கள் சமூகம்மீது ஒரு அரசானது அநீதியான யுத்தம் ஒன்றை தொடர்ந்து நடத்திவருவதும், பொருளாதாரத் தடைகளை விதிப்பதும், போக்குவரத்து சுதந்திரத்தை மறுப்பதும ஐ. நா. சாசனத்திற்கும், சர்வதேச மனிதஉரிமை நியமங்களுக்கும் மாறானது. மனிதஉரிமை, சனநாயகம் என்ற கோட்பாடுகளுக்கு முதன்மை கொடுத்து, அதனை பொருளாதார உதவியுடன் தொடர்புபடுத்தி, மூன்றாம் உலகை கட்டுப்படுத்த முனையும் மேற்குலகத்திற்கு சிறிலங்காவில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரியாததல்ல.

தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் சுதந்திரமாக நடமாடுவதற்கு சிறிலங்கா விதித்துள்ள தடையும், கிளாலி நீரேரியில் கடற்படை நிகழ்த்திய படுகொலைகளும மேற்குலக மனிதஉரிமை அரங்குகளில் கண்டனத்திற்கு உள்ளாகின. இதனைத் தொடர்ந்து போக்குவரத்து தடைகளை தளர்த்தி, மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு வழியமைத்துக் கொடுக்குமாறு சில மேற்குலக நாடுகள் சிறிலங்கா அரசுமீது அழுத்தத்தைப் பிரயோகிக்கத் தொடங்கின. இதன் பெறுபேறாக, அகதிகளுக்கான ஐ நா. உயர்ஸ்தானிகராலயம் இப்பிரச்சினையில் தலையிட்டு உதவிபுரிய முன்வந்தது. சிறிலங்கா அரசுடனும், விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும் பேச்சுக்களை நடத்தி இருதரப்பினரதும் ஒப்புதலுடன் தனது நேரடியான கண்காணிப்பின் கீழ் பூநகரிப் பாதையை போக்குவரத்திற்கு திறந்து விடுவதற்கு ஐ.நா. தூதரகம் முயன்றது. இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் கடந்த ஜனவரியில் ஆரம்பமாகி, ஜூன் வரை தொடர்ந்தது.

முதற்கட்டப் பேச்சுக்களின் போது, ஐ நா. வின் கண்காணிப்பின் கீழ் பூநகரிப் பாதையை திறந்து விடுவதற்கு கொள்கையளவில் விடுதலைப் புலிகள் இயக்கம் இணங்கியது. எனினும் பூநகரியில் நிலைகொண்டுள்ள இராணுவம் அகற்றப்பட்டு, ஐ நா. அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் மக்கள் சுதந்திரமாக போக்குவரத்து நடத்துவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியது விடுதலைப் புலிகளின் இந்த நிபந்தனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. பூநகரியிலுள்ள முகாமை அகற்றுவதற்கு இராணுவம் தயாராக இல்லையென ஐ.நா. உயர்ஸ்தானிகராலய பாதுகாப்பு அதிகாரியான டாக்டர் நீக்கலஸ் விடுதலைபுலிகளுக்குத் தெரிவித்தார் இதனையடுத்துபுலிகள் இயக்கம்மாற்றுயோசனை ஒன்றைத் தெரிவித்தது. சங்குப்பிட்டிப் பகுதியிலிருந்து ஒரு மைல் தூரத்திற்காவது இராணுவம் விலகி நின்று ஒரு மனித போக்குவரத்து வழியை (Human Corridor) உருவாக்கி, தடையின்றி, சோதனையின்றி மக்கள் சுதந்திரமாகப் பயணம் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட வேண்டுமெனப் புலிகள் ஒரு திட்டத்தைக் கொடுத்தனர். இராணுவத் தலைமையுடன் பேசிவிட்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்த ஐ. நா. பிரதிநிதிகள், இராணுவம் ஓர் அங்குலத்திற்கும் நகரத் தயாராக இல்லையென்றும் பூநகரியால் போக்குவரத்தை மேற்கொள்ளும் பொதுமக்கள் சகலரும் இராணுவ சோதனைக்கு ஆளாக வேண்டுமென இராணுவத்தினர் நிர்ப்பந்தப்பதாகவும் கூறினர். இராணுவத்தின் இந்தக் கடும்போக்கு காரணமாக பேச்சுக்களில் இழுபறி ஏற்பட்டது. இந்த நிலையில், புலிகள் இயக்கம் இன்னொரு யோசனையை ஐ. நா விடம் தெரிவித்தது. கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையூடாக ஐ நா வின் கண்காணிப்பின் கீழ் உணவு வாகனங்களை அனுமதிக்குமாறு புலிகள் கேட்டுக் கொண்டனர். வாகனங்களை இராணுவ சோதனைக்கு உட்படுத்தவும் இணங்கினர். ஆனால் இராணுவம் உணவுப் பொருள்களைச் சூறையிடாது பார்த்துக் கொள்வது ஐ நா. தூதரகத்தின் பொறுப்பு எனவும் வலியுறுத்தினர். உணவு வாகனங்கள் மட்டுமன்றி நோயாளிகளும் இப்பாதையூடாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர். முதற்கட்டமாக, யாழ்ப்பாணத்தின் மீதான பொருளாதாரச் சுமையை இறக்குவதற்கு உணவு வாகனங்களை அனுமதித்து, இப்போக்குவரத்து சீராக நடைபெறுகிறதா எனக் கண்காணித்து, அடுத்த கட்டமாக மக்களின் போக்குவரத்து பற்றிப் பேசலாமென புலிகளின் பிரதிநிதிகள் எடுத்து விளக்கினர். இந்த யோசனை நடைமுறைச் சாத்தியமானது என ஐ. நா. அதிகாரிகள் ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் இந்த யோசனையை சிறிலங்கா அரசு வரவேற்றதுபோலத் தெரியவில்லை. கிளாலிப் பாதையை மூடிவிட்டு, பூநகரிப் பாதையால், இராணுவ சோதனையுடன் பொதுமக்களை அனுமதிப்பதில்தான் அரசு அக்கறை காட்டியது. புலிகளையும் மக்களையும் பிரித்து, புலிகளின் நடமாட்டத்தை தடுத்து நிறுத்துவதிலதான் இராணுவமும் சிரத்தை காட்டியது இந்த நிர்ப்பந்தங்கள் காரணமாக ஐ. நா. தூதரகத்தின் நிலைப்பாட்டிலும் மாற்றம் தெரிந்தது. இராணுவ சோதனையுடன் மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டை ஐ. நா. தூதரகம் வலியுறுத்தத் தொடங்கியது.

இந்த சூழ்நிலையில்தான் கடந்த ஜூன் முதலாம் திகதி, பூநகரிப் பாதையை திறப்பது சம்பந்தமாக ஒரு நகல் ஒப்பந்தத்தை ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் எம்மிடம் கையளித்தது. இந்த ஒப்பந்தத்தில் பல சிக்கல்கள் இருந்தன. இதுபற்றி புலிகள் இயக்கத்தின் மத்திய குழு நன்கு பரிசீலனை செய்து முடிவு எடுக்குமென ஐ.நா. அதிகாரிகளிடம் நாம் கூறினோம். எனினும், இந்த ஒப்பந்தத்திலுள்ள சில விதிகள் தமிழ் மக்களின் நலனுக்குப் பாதகமாகவும், புலிகளின் போராட்டத்திறகு குந்தகமாகவும் அமைந்திருப்பதை ஐ நா. அதிகாரிகளுக்கு நாம் சுட்டிக்காட்டினோம்.

முதலாவதாக, இந்த ஒப்பந்தம் முத்தரப்பு உடன்பாடாக அமையவில்லை. அதாவது, சிறிலங்கா அரசு, விடுதலைப் புலிகள் இயக்கம், ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் ஆகிய மூன்று தரப்பினர் மத்தியிலான ஒப்பந்தமாக வரையப்படவில்லை. விடுதலைப் புலிகளுக்கும் ஐ. நா. தூதரகத்திற்கும் மத்தியிலான ஒரு ஒப்பந்தமும், அரசுக்கும் ஐ நா. வுக்கும் மத்தியிலான இன்னொரு ஒப்பந்தமுமாக இரு ஒப்பந்தங்கள் தனித்தனியே, அவரவருக்குள்ள கடப்பாடுகளுடன் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதுபற்றி நாம் வினவியபொழுது முத்தரப்பு ஒப்பந்தமாக (Tripartite Agreement) இந்த உடன்பாட்டைச் செய்துகொள்ள அரசு விரும்பவில்லை என ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்தனர். அப்படியாக ஒரு உடன்பாடு செய்துகொள்வதாயின், ஆட்சியதிகாரம் படைத்த ஒரு சக்தியாக விடுதலைப் புலிகள் இயக்கத்தை அங்கீகரிப்பதாக முடியுமென்றும், இதனால் புலிகளுக்கு சர்வதேச சட்ட அங்கீகாரம் வழங்குவதாக அமையுமென்றும் சிறிலங்கா அரசு அஞ்சுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் ஒரு பகுதியை, அதுவும் தமிழர் தாயகத்தின் நிலத்துண்டை ஆக்கிர

அன்ரன் பாலசிங்கம்

மித்து நிற்கும் அரசு, புலிகளின் ஆட்சியதிகாரத்தை ஏற்க மறுப்பதும், அதன் காரணமாக முத்தரப்பு ஒப்பந்தத்தை நிராகரிப்பதும், புலிகளின் சர்வதேச அங்கீகாரம் பற்றி கவலைப்படுவதும் எமக்கு நியாயமாகத் தெரியவில்லை. அரசின் இந்த நிலைப் பாட்டை ஐ நா. தூதரகமும் ஏற்றுக்கொண்டமை எமக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

அடுத்து, இந்த ஒப்பந்தத்தின் மையப் பகுதியாக இராணுவ சோதனைகள் பற்றிய விதிகள் அமைகின்றன.

இந்தப் பாதையால் பயணம் செய்யும் சகல குடிமக்களும் தமது அடையாளத்தை நிரூபிக்கும் சான்றிதழ்களை காண்பிக்க வேண்டும்.

சகல மக்களையும், அவர்களது மூட்டை முடிச்சுக்களையும், வாகனங்களையும சோதனையிடும் பிரத்தியேக அதிகாரம் பாதுகாப்பு படைகளுக்கு உண்டு.

தடை செய்யப்பட்ட பொருள்களோ, ஆயுதங்களோ கொண்டு செல்லும் நபர்களை இராணுவம் கைது செய்யும்.

ஒரு தனி நபர் இந்தப் பாதையை பாவிக்கும் உரிமை உள்ளவரா இல்லையா என்பதை இராணுவத்தினரே தீர்மானிப்பர்.

ஒரு தனிநபர் இந்த பாதையை பாவிக்க தகுதியற்றவர் (Ineligible) எனப் படையினர் தீர்மானிக்கும்பட்சத்தில அவரை திருப்பியனுப்பிவிடும் அதிகாரம் படையினருக்கு உண்டு.

இப்படியாக இராணுவத்தினருக்கு விசேட அதிகாரங்களை வழங்கும விதிகள் இந்த ஒப்பந்தத்தில் உள்ளன. இதுபற்றி நாம் கடும் ஆட்சேபம் தெரிவித்தோம். இந்த விதிகளின் படி படையினருக்கு ஏகபோக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. "தகுதியற்றவர்" என இராணுவம் கருதும் எவரும் திருப்பி அனுப்பப்படலாம். தடை செய்யப்பட்ட பொருள்கள் என்ற போர்வையில் மக்கள் கைதாகலாம். பாதையைப் பாவிக்கும் சுதந்திரம் மக்களுக்கு உண்டு என்று சொல்லிவிட்டு, பாதையைப் பாவிக்கும் உரிமை ஒருவருக்குஉண்டா, இல்லையா என இராணுவமே தீர்மானிக்கும் எனக் கூறுவது கேலிக் கூத்தானது இந்தக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்கள் மக்களின் பாதுகாப்பான சுதந்திரமான போக்குவரத்திற்கு குந்தகமாக அமையும். இப்படியான அதிகாரங்கள் இராணுவத்திற்கு வழங்கப்படும் பட்சத்தில் ஐ. நாவின் கண்காணிப்பு அர்த்தமற்றதாகிவிடும் என நாம் எடுத்து விளக்கினோம்.

வவுனியா எல்லைப் பிரதேசத்தில் தமிழர்கள் இராணுவச் சோதனைக்கு ஆளாகி வருகின்றனர். இது சிங்கள தேசத்தின் எல்லை என்பதால் இது பற்றி நாம் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் பூநகரிப் பிரதேசம் தமிழர் மாநிலத்தின் ஒரு பகுதி. தமது சொந்த மண்ணாகிய ஒரு நிலப்பரப்பை சுதந்திரமாக கடந்து செல்லும் உரிமை தமிழர்களுக்கு உண்டு அல்லவா? இப் பகுதியை இப்பொழுது ஆக்கிரமித்து நிற்கும் இராணுவம் இதனூடாகச் செல்ல விரும்பும் மக்களை சோதனை செய்வதோ, தடுத்து வைப்பதோ, கைதுசெய்வதோ நியாயமானதலல. விடுதலைப்புலிப் போராளிகள் இந்தப் பாதையைப் பயன்படுத்தப் போவதில்லை. ஆயுதங்களையும் கடத்திச் செலலப்போவதிலலை. அவர்கள் போக்குவரத்து செய்ய ஏராளமான பாதைகள் இருக்கின்றன. பொதுமக்கள் ஆயுதங்களைக் கடத்திச் செலவார்கள் என இராணுவம் அஞ்சினால், ஐ. நா. அதிகாரிகள் இதனைக் கண்காணிக்கலாம அல்லவா? உதாரணமாக, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு புறப்படும் ஒரு பயணி, பூநகரியில இராணுவ சோதனைக்கு உள்ளாகி, மீண்டும் வவுனியாவில் இராணுவ சோதனைக்கு ஆளாகி, அதுவும் போதாமல் கொழும்பிலும் சிங்களப் பொலிசாரின் சோதனைக்கும் கெடுபிடிகளுக்கும் ஆளாக வேண்டிய பரிதாபமான நிலை ஏற்படும் அலலவா? தமிழர்களின் போக்குவரத்து கஷ்டங்களை நீக்கப்போவதாக கூறிக்கொள்ளும் ஒரு உலக நிறுவனம், அதுவும் மனித உரிமைகள் பற்றி அக்கறை காட்டும் ஒரு அமைப்பு இதற்கு இடமளிப்பது நியாயமா என நாம் தெரிவித்தோம். ஆனால் ஐ.நா. அதிகாரிகள் எமது நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டது போலத் தெரியவில்லை. ஒரு அரசு என்ற ரீதியில், சிறிலங்காவுக்கு இலங்கை பூராகவும் இறைமையும் நில ஆட்சி உரிமையும் உண்டு என்பதை அவர்கள் மறைமுகமாக எடுத்துக்கூற விழைந்தனர். அத்துடன் தமிழர் தாயகம் என்பதையோ, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பதையோ தாம் அங்கீகரிக்க முடியாது என்பதையும் சூசகமாக எடுத்துக் கூறினர். அப்படியானால் சிங்கள இராணுவம் தனக்குச் சொந்தமெனக் கருதும் தமிழர் மண்ணில் தமிழரை விரட்டிவிட்டு நில ஆக்கிரமிப்பு செய்வதை அரசின் உரிமைப்பாடு என இவர்கள் எண்ணுகிறார்கள் போலும். இந்த நிலைப்பாட்டை நாம எப்படி ஏற்றுக்கொள்வது?

இந்த ஒப்பந்தத்தில் வேறுபல சிக்கலான விதிகளும் இருக்கத்தான் செய்கின்றன. இவை, இப்பிரதேசத்தில இராணுவ நடவடிக்கை சம்பந்தப்பட்டவை. இப்பிரச்சினைகள் பற்றி நான் இங்கு விபரிக்க விரும்பவில்லை.

இந்த ஒப்பந்தத்தில் இன்னுமொரு அம்சம் எமக்கு ஏற்புடையதாக அமையவில்லை. இது ஐ. நாவின் கண்காணிப்பு பங்குபற்றியது. இழப்பீட்டு (INDEMNITY) நடைமுறை சம்பந்தமானது. அதாவது, இந்தப்பாதையைப் பாவிக்கும் பயணிகளுக்கு சேதம் ஏற்பட்டாலோ, மரணம் நேர்ந்தாலோ அல்லது வேறு எத்தகைய இழப்புகள் ஏற்பட்டாலோ ஐ நா. தூதரகம் அதற்கு பொறுப்பாளியாக இராது என்றும், நஷ்டஈடுகளும் வழங்காது என்றும் ஒரு விதி தெட்டத்தெளிவாக எடுத்துக்கூறுகிறது.

அப்படியானால், பாதிக்கப்படும் மக்களுக்கு யார் பொறுப்பு? பயணி ஒருவர் கைதுசெய்யப்பட்டு காணாமல்போனால், அல்லது சுடுபட்டு மரணித்தால், அல்லது அவரது பொருள்கள் சூறையாடப்பட்டால், அவருக்காக குரல கொடுப்பது யார்? அவருக்கு அல்லது அவரது குடும்பத்திற்கு நஷ்டஈடு கொடுப்பது யார்? இந்த முக்கியமான விவகாரத்தில் எந்த ஒரு பொறுப்பையும் தான எடுப்பதற்கு தயாராக இல்லையென ஐ.நா. கைவிரித்து நின்றால், தமிழ் மக்கள் யாரிடம் சென்று முறையீடு செய்வது? அப்படியாயின் ஐ.நாவின் கண்காணிப்பு எதற்கு? கண்களை மூடிக்கொண்டு, கைகளை கட்டிக்கொண்டு கண்காணிப்பு நடத்துவதாயின் ஐ.நா. இதில் தலையிடுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

இந்தக் கேள்வியை நாம் எழுப்புவதை நியாயமற்றது என யாராவது சொல்லலாமா?

# மைலாய் படுகொலையும்; அமெரிக்க நீதிவிசாரணையும்

தென் வியட்நாமிலுள்ள ஒரு கிராமமே மைலாய் என்பது. வியட்நாம் போரில் ஈடுபட்டிருந்த அமெரிக்க இராணுவத்தின் ஒரு பிரிவினர் லெப்டினன்ட் வில்லியம் எல். கல்லே தலைமையில் இக்கிராமத்தினுள் பிரவேசித்தனர். 1968 மே 16ஆந் திகதியன்று இக்கிராம மக்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பெண்கள், குழந்தைகள் உட்படக்கோரமாகக் கொலை செய்யப்பட்டனர். இப்படுகொலை விபரங்கள் உடனேயே மூடிமறைக்கப்பட்டு இறந்தவர்கள் யாவருமே கெரில்லாக்கள் என நாமஞ்சூட்டப்பட்டு விட்டனர்.

ஆயினும் இவ்விடயம் பற்றித தற்செயலாகக் கேள்விப்பட்ட றெனல்ட் ரைடெனர் என்ற அமெரிக்க இராணுவ சிப்பாயின் மனச்சாட்சி அவனைக் குடைந்தெடுத்தது. தான் கேள்விப்பட்டது, காலம் தாழ்த்திச் சுடலை ஞானமாகி விடக்கூடாது என்பதால் இதுபற்றி மேலிடத்துக்கு அறிவப்பதென்ற தீர்மானத்துக்கு வந்துவிடடான். விசாரணை நடந்தால்போதும் என்ற அளவுக்கே மனச்சாட்சி அவனை குத்தியிருக்க வேண்டும். அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு இவ்விடயம் அறிவிக்கப்படடுச் சில காலத்துக்குப் பின்னர் பததிரிகையாளர் செய்மோர் எச் ஹேர்ஷ் என்ற அமெரிக்கர் துப்புதுலக்க ஆரம்பித்து விபரங்களைப் பகிரங்கப்படுத்தி விட்டார். அமெரிக்க இராணுவம் லெப்டினன்ட கல்லே மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுததப்பட்டு விடடது.

இராணுவ நீதிமன்றில் கல்லேயும் அவரது மேலதிகாரி கப்டன் மெடினாவும் கல்லேயின் கீழ் பணிபுரிந்த சிலரும் குற்றம் சாட்டப்பட்டனர், இராணுவ நீதிமன்றம் கல்லேயின் கீழ் பணியாற்றியவர்களை உடனேயே விடுவித்து விட்டது. இதற்கான காரணம் தெளிவற்றதாகவே உள்ளது. கல்லே தனது எதிர்வாதத்தை பின்வருமாறுசமர்ப்பித்தான்: கிராமத்தில் காணப்படுபவர்கள் யாவருமே எமது எதிரிகள். எனவே துடைத்தழிப்பது மட்டுமே நமது குறிக்கோள் எனக் கப்டன் எனக்கு உத்தரவிட்டிருந்தார். அதைத்தான் நான் நிறைவேற்றினேன். பெண்களையும், குழந்தைகளையும் கூடவா கொல்வது எனக்கேட்டபோது பொது அறிவைப் பாவித்துச் செயற்படு எனக் கட்டளை பிறந்தது. எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கு பற்றிய அல்லது அமெரிக்க இராணுவத்தைத் தாக்க முயற்சிக்கும் பெண்கள், பிள்ளைகள் கொல்லப்படுவதில் தப்பேதுமில்லை என்றே எனக்கு அறிவுறுத்தப்பட்டது.

கப்டன் மெடினாவோ எனில் தான இப்படிக் கட்டளையேதும் பிறப்பிக்கவில்லையென மறுத்துரைத்தார். நீதிமன்றம் கப்டன் இப்படியான கட்டளை ஒன்றைப் பிறப்பித்தாரா இல்லையா என்பது தேவையற்ற விடயம் எனக் கூறிவிட்டது. ஏனெனில் திட்டமிட்ட படுகொலை விடயங்களில் 'மேலதிகாரியின் கட்டளைப்படி செய்யப்பட்டது' என்ற வாதம் ஏற்கப்படுவதில்லை. 1865இலிருந்து நியூரம்பேர்க் (1945) ஈச்மன் (1961-62) வழக்குகள் ஊடாக இந்த விதி ஏற்கப்பட்ட ஒன்றுதான். சட்ட முரணான கட்டளைகளுக்கு இராணுவத்தினர் பணிய வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால் ஒழுங்கும் கட்டுப்பாடும் அவசியமான இராணுவத்தில் இத்தகைய போக்கு குழப்பத்தை ஏற்படுத்தாதா என்பதும் நியாயமான வினாவேதான்.

அரசியலமைப்புச் சட்ட அறிஞர் ஏ.வி டைகி இத் தர்மசங்கடத்தை பின்வருமாறு வெளிப்படுத்துகிறார். "சிப்பாய் ஒருவர் மேலதிகாரியின் கட்டளைக்கு கீழ்ப்படியாதபோது இராணுவ நீதிமன்றத் தீர்ப்பின்படி சுட்டுக்கொல்லப்பட வேண்டியவராகிறார். அதே கட்டளைக்கு கீழ்ப்படிந்தாலோ பின்னர் நீதிபதிகள், யூரிகள் முன்பான வழக்குத் தீர்ப்பின்படி தண்டனைக்குள்ளாக வேண்டியவராகிறார்.

ஒருகையில் சர்வதேசச் சட்ட நூலையும், மறுகையில் துப்பாக்கியையும் ஏந்தியபடி இராணுவத்தின் களத்தில் இறங்குவதில்லை என்றாலும் "பால பாடத்தையே" மறந்து விட்டதாக வாதிடுதல் மனிதத்துவத்தை கேலி செய்வதாகும் என்பதே தற்போதைய சட்ட நிலையாகும்.

எனவே மேற்கூறிய சிக்கலுக்கு எப்படி விடை காணலாம் என்பதை டச்சுச் சட்ட அறிஞர் பி. வி.ஏ நோவிங் விளக்குகிறார்: "மேலதிகாரியின் கட்டளை" என்ற எதிர்வாதம் எப்போதும் செல்லாது என்று தீர்க்கப்பட்ட வழக்குகள் பெரும்பாலுமே பேரில் வெற்றிபெற்றோரால்தோல்வி கண்டோருக்கு எதிராகத் தொடுக்கப் பட்டவையோடும்

எப்போதைக்கும் பொருத்தமான யுத்த காலத்திலும் சரி சமாதானகாலத்திலும சரிஏற்புடையதாக கூடிய விதிகளை தக்கிவருகிறோம் என்கிறார். றோலிங். குடிமக்களைக் கொல்லும் ஆயுதப் படைகளின் நடத்தை இரண்டு விதமாக பிரிக்கப்பட வேண்டும் என்பது இவரது கருத்து.

குறிப்பிட்ட ஒரு சிப்பாயின் தனிப்பட்ட நடத்தை இந் நடத்தையினால். படுகொலைகள் நிகழினும் அதற்கு முழு இராணுவத்தையுமே பழி சுமத்த முடியாது அவர் உள்நாட்டு நீதிமன்றமொன்றில் உடனடியாகத் தண்டிக்கப்பட வேண்டியவராகிறார். (இலங்கையில் சில வருடங்களுக்கு முன்னர் இராணுவ சிப்பாய் ஒருவர் வவுனியா புகையிரத நிலையத்தில் வைத்துப் பயணிகளைச் சுட்டுக் கொன்றமையும், அவர் மனக்கோளாறினால் அங்ஙனம் நடந்து கொண்டார் என அரசாங்கம் விளக்கமளித்ததும்வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்)

இரண்டாவதுவிதமான நடத்தை திட்டமிட்ட விதத்தில் அமைந்ததாகும். இது கூட்டுப பொறுப்பை ஏற்படுத்துவதாகும் இதற்கு முழு இராணுவ அமைப்பும் அரசியல் தலைமைகளுமே பொறுப்பேற்க வேண்டும எனக் கூறப்படுகின்றது. இறந்தோர் எததனை பேர், படுகொலைகளைச் செய்தோர் எத்தனை பேர், அவர்களது தனிப்பட்டஉடல், உள, குறைபாடுகள் மேலதிகாரியின் கட்டளை என்பன யாவுமே இங்கு தேவையற்ற விடயங்களாகும். திட்டமிட்ட படுகொலைகள் (System Criminality) உள்நாட்டு நீதிமன்றத்தில் தான விசாரிக்கப்பட வேண்டும் என்ற அவசியமுமில்லை. உதாரணமாக ஈச்மன் இஸ்ரேலுக்கு கடத்தி வரப்பட்டு விசாரணை இஸ்ரேலிய நீதிமன்றத்தில நடாததப்படடதைக் குறிப்பிடலாம் ஆயினும் குறிப்பிட்ட நாடு தானே முந்திக் கொண்டு விசாரணையைத் தொடங்கி விடுவதனால் பின்னால் ஏற்படவுள்ள பாரிய விளைவுகளை அது தவிர்க்கக் கூடியதாகிறது. இதனையே மைலாய் வழக்கில் அமெரிக்கா செய்தது.

மைலாய் படுகொலைகளுக்காக இராணுவ நீதிமன்றம் கல்லேக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதித்தது. இதற்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டு சட்ட நுணுக்கத்தினடிப்படையில் கல்லேயின் அப்பாவித்தனம் வலியுறுத்தப்பட்டதுசட்டவிரோதமானசெயல் என்பது வேறு. அச்செயலைப் புரியும் போது ஒருவர் அது சட்ட விரோதமான செயல் என்பதை உண்மையிலேயே அறிந்திருந்திரா என்பதுவேறு. கல்லே அப்படி ஒன்றும் சிறந்த பொது அறிவுப் பூஷணமல்ல. வியட்நாமியர்களைக்கொல்வது தானறிந்த வரையில் சட்ட விரோதமானதல்ல என்றே கல்லே கருதினான். எனவே சட்ட விரோதமான முறையில் குடிமக்களைக் கொன்றதாக கூற முடியாது என்று வாதிடப்பட்டது. ஆயினும் நீதிபதிகளில் பெரும்பான்மையினர் இந்த வாதத்தை நிராகரித்தனர்.

நீதிபதி ஆர். ஈ. குயினினுடைய தீர்ப்பு வருமாறு கூறுகிறது: ஒவ்வொரு இராணுவ சிப்பாயும் முதலில் மனிதன்; பின்னரே சிப்பாய். இராணுவச்சட்ட விதிகள் தெரியாதென்றே வைத்துக் கொண்டாலும் பொதுமக்களை, சிறுவர்களைக் கொல்லுதல் யுத்தச்சட்டங்களுக்கு முரணானது என்ற அரிச்சுவடியை அறிந்திருக்க அவர் மனிதனாக இருந்தாலே போதுமானது."

மனிதாபிமானக் காரணங்களுக்காக கல்லேயின் சிறைத் தண்டனை 20 வருடங்களாக குறைக்கப்பட்டு விட்டது. ஆனால் பின்னர் ஜனாதிபதி நிக்சன் பொதுமக்கள் மத்தியில் அபிப்பிராயபேதம் வளர்வது இன்னும் மோசமான விளைவுகளைத் தரும் எனக் கருதி கல்லேக்கு ஜனாதிபதி மன்னிப்பைவழங்கினார். இதற்குப் பதிலடியாக 'வாட்டர் கேட்'டில் சிக்கிக் கண்ணீருடன் வெள்ளை மாளிகையிலிருந்து நிக்சன் வெளியேறிய போது பத்திரிகைகள் 'கல்லேக் காட்டூன்கள்' போட்டு மகிழ்ந்தன என்பதும் குறிப்பிடப்பட வேண்டும்.

சட்ட நிலைமையைப் பொறுத்தவரையில் கல்லே வழக்கு விசாரணை ஒரு புதிய திருப்பமேயாகும். இராணுவத்தின் மனச்சாட்சிப்படி நடக்கவும் பொது அறிவைப் பயன்படுத்தவும் சட்டம் ஊக்கமளித்துள்ளமை இங்கு முக்கியமானதாகும்.

டொனால்ட் டோசன் என்ற விமானப்படை விமானிக்கு கம்போடிய நகர் ஒன்றின் மீது குண்டு வீசுமாறு மேலிடம் உத்தரவிட்டது. 1973 ஜூன் 5ஆம் திகதி பி—52 ரக குண்டு வீச்சு விமானத்தில் சென்று இதை நிகழ்த்தும்படியான உத்தரவு. ஆனால் அவ்வேளை வியட்நாம் யுத்தத் தொடர்பான பாரிஸ் உடன்படிக்கைகள் கையெழுத்தாகி விட்டமையினால் இனியும் குண்டுமாரி பொழிவதற்கு தனது மனச்சாட்சி இடந்தரவில்லையென கட்டளையை மீறிநின்றார்கப்டன்டோசன். இவரைக் கைது செய்து வழக்

**வி. ரி. தமிழ்மாறன்**

கிட்ட போதிலும் மனச்சாட்சிப்படி ஆட்சேபிக்கும் அவரது உரிமை அங்கீகரிக்கப்பட்டு அவர் இறுதியில் விடுதலையானார்.

மேலே குறிப்பிட்ட இரண்டு விதமான இராணுவ நடத்தைகளில் மைலாய் படுகொலைகள் இரண்டாம் வகையினதே என்பதில ஐயமில்லை. எனவே வெறுமனே பணரீதியான நஷ்ட ஈடுகள் எதிர்காலத்தில் இராணுவத்தினரின் ஒழுங்குக்கும் மனிதாபிமான நடத்தைக்கும் வழி செய்வதாக அமையுமா என்பதும் வினாவாகிறது.

## பிரேமதாசாவின்...

மூலம் அவருடன் சென்றதாக பொலிசார் உறுதியாக நம்புகின்றனர்.

கொழும்பின் முக்கிய வர்த்தக மையங்களில் வீரகுமார் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார் எனவும், அவர்களின் துன்பங்களில் பங்கு கொண்டதினாலும், அவர்களுக்கு வழங்கிய உதவிகளினாலும் "கடவுள் வருகிறார்" என வர்த்தகர்களால் குறிப்பிடப்பட்டார் எனவும் வேறொரு தகவல் தெரிவிக்கிறது.

இவர் வாழைத்தோட்டப் பகுதி ஐக்கிய தேசியக் கட்சிக் கிளையில் முக்கிய உறுப்பினராக இருந்து வந்திருக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவை எல்லாவற்றுக்கும் சிகரம்வைத்தாற்போல் பிரேமதாசவின் இறுதிநாளில் அவரது பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் வீரகுமார் முன்னிலையிலேயே ஆராயப்பட்டிருப்பதாக சிறிலங்கா புலனாய்வுத் துறையினர் நம்புகின்றனர்.

இறுதியாகக் கிடைத்த தகவலின்படி பிரேமதாச கொல்லப்பட்டதற்கு முதல்தினமிரவு வீரகுமாரும் வேறு சிலரும் பிரேமதாசவின் தனிப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் மொகைதீனின் வீட்டில் கழித்தனர் எனக் கூறுகின்றனர்.

பிரேமா கொலை செய்யப்பட்ட தினம் அதிகாலையில் 'சுச்சரித்த' இல்லத்தில்பிரேமதாச, மொகைதீன், வீரகுமார் ஆகியோர் உரையாடிக் கொண்டிருந்த போது அவ்விடத்திற்கு வந்த பிரேமதாசவின் பாதுகாப்புப் பிரிவிற்கு தலைமை வகித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொனி குணசிங்கவினால் பிரேமதாசவின் அன்றைய அசைவுகள் குறித்தும் வழங்கப்படவுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் விளக்கப்பட்டது. அப்பொழுது வீரகுமாரும் அவர்களுடன் கலந்துகொண்டிருககிறார். அதனால் பிரேமாவின் அன்றைய ஒவ்வொரு நகர்வும் வீரகுமாருக்கு நன்கு தெரியும் என புலனாய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் குண்டுவெடிப்புச் சம்பவத்தில்பிரேமா, மொகைதீன், றொனி குணசேகரண ஆகிய மூவரும் கொல்லப்பட்டு விட்டதால் மேலதிக விபரங்கள் எதனையும் பெற முடியாமல் பொலிசார் திண்டாடுகின்றனர்.

சம்பவத்திற்கு முதல் தினம் இரவு மொகைதீன் வீட்டிற்கு வீரகுமாருடன் வந்திருந்தவர்கள் யார் என்பதை அறிவதில் பொலிசார் ஈடுபட்டிருக்கின்றனர். மேலும் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்திருந்த நால்வர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் போது தலைமறைவாகியுள்ளனர். இவர்கள் கொடுத்த முகவரிகள் போலியானவை என கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து இவர்களுக்கும் குண்டு வெடிப்புக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்பிருக்க வேண்டும் என பொலிசார் தெரிவிக்கின்றனர். அதிகாரிகளின் ஒத்துழைப்பின்றி இவர்கள் தப்பியிருக்க முடியாது எனவும் கூறப்படுகிறது.

மேலும், பிரேமா கொலை தொடர்பாக விசாரணைகள் விரிவடைந்து செல்வதாகக் குறிப்பிடும் சிறிலங்கா புலனாய்வு வட்டாரங்கள், பல்வேறு தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ள இத்தருணத்தில் அரச அதிகாரிகள் சிலர் விசாரணைக்கு முட்டுக்கட்டையாக இருப்பதாக கவலைதெரிவிக்கின்றனர்.


## 2-ம் ஆண்டின் நீங்கா நினைவலைகள்

பிறப்பு: 13 — 11 — 1971



வீரச்சாவு : 16 — 07 — 1991

**வீரவேங்கை சுகந்தன்**


(பூபாலசிங்கம் பூலோகச்சந்திரன்)

செம்பாட்டு மண்ணாம் புன்னாலைக்கட்டுவன் — பெற்றெடுத்த
செந்தமிழ் செல்வன் நீஅன்றோ — சுகந்தா!
தமிழ்ஈழத் தாயகமே தாரக மந்திரமாய்
தமிழ்மண்ணை காத்திடவே புறப்பட்டாய் போராட
அதிகார வெறியர்களை அடக்கி ஒடுக்கிடவே
ஆனையிறவுச் சமரினிலே புலியாகி, புயலாகக் களம்புகுந்தாய்
அழியாப் புகழுடனே அணைத்திட்டாய் தமிழ்மண்ணை
மண்ணுக்கு வித்தாகிய மாவீரர் வரிசையிலே
ஈராண்டு சென்றதடா — சுகந்தா!
ஏங்குதே எம்நெஞ்சம் வாட்டுதே உன்நினைவு
உனது தமிழீழ இலட்சியக் கனவு நிறைவேற
உனது பாதச் சுவடுகளில் நாமும் தொடர்வோம்.

அச்செழு. குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள்.

(5391)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மட்டக்களப்பு - அம்பாறை துணைத்தளபதி

## லெப். கேணல் றீகன்

இராசையா சிற்றம்பலம்

வெல்லாவெளி மட்டக்களப்பு

பிறப்பு : 24 - 11 - 1963

வீரச்சாவு : 16 - 07 - 1990

வெல்லாவெளியில் காமினி யென்றொரு
காவலாளிக்கு பாடம் புகட்டியது
எல்லை விளையாட்டில் முன்னணியாகி;
முதன்மையாளியாகி கொழும்புக்குப் போய்
கொழும்பு, அணியை நையப்புடைத்ததாம் என்று
மூக்கில் ஒரு கோபம் வந்து கிளர்ந்தெழுந்து
வீடுவந்து சேர்[த்]ந்த பாடு.....
எல்லையில் கொடுமை கண்டு
பல்லை இளிக்கவில்லை
புல்லை தின்பதில்லை புலியாகி
போனகதை வந்து எல்லையில் புயலாய்
வீசியவை எல்லாம் எமக்கு நேற்று நடந்தவை.

தமிழீழ மக்கள்

(சி/7013)

# மாற்றானின் பிடியிலிருந்து எமது மண்ணை மீட்டெடுக்க - நாம் மரணத்தை ஏற்கவும் தயாராகவேண்டும்

-லெப். கேணல் றீகன்

## 13. 02. 1987

அன்று இரவு றீகனது குடும்பத்தைச்சேர்ந்த எட்டுப்பேர் சிங்களப்படைகளினால் வெட்டிக் கொல்லப்பட்டனர் றீகனது அம்மா றீகனதுஅண்ணா றீகனது அக்கா, அவரின் கணவனும் மூன்று பிள்ளைகளும், ஒரு நெருங்கிய உறவுக்காரரும் கொல்லப்பட்டனர் இந்த வெறிச்செயல் றீகனை மேலும் கொதித்தெழச் செய்தது. எரிகிற நெருப்பில் எண்ணெயஊற்றியது போலானான்.

இப்படியிருக்கும் போது தான் வடமராட்சி மக்களை படுகொலை செய்ய வந்த சிங்களப் படைகளுடன் சண்டை செய்ய மட்டக்களப்பிலிருந்து றீகன் ஒரு அணியுடன் வந்திருந்தான்.

சண்டையை சிறப்பாக நடத்திவிட்டு மீண்டும் மட்டக்களப்புக்கு வந்தபிறகு அமைதிப் படை என்ற பெயரில் இந்திய ஆக்கிரமிப்புப் படை தமிழீழம் வந்தது ஒரு சில மாதத்திற்குள்ளேயே தமது அமைதி முகமூடியை கழற்றிவிட்டு ஆக்கிரமிப்பு சுயரூபத்தைக் காட்டியது.

அந்த வேளையில் மட்டு-அம்பாறை துணைத்தளபதியாக றீகன் இருந்தான். மீண்டும் மீண்டும் மன்னிப்பு அளிக்கப்பட்ட போராட்ட விரோதிகள் மீண்டும் இந்தியப்படையுடன் சேர்ந்து தேசத்துரோகியானார்கள். ''இவர்களுக்கு இனியும் மன்னிப்பு வழங்குவதே தேசவிரோதச் செயல்'' என்று றீகன் கூறுவான்.

அந்த நாட்களில் மட்டக்களப்பு நகருக்குள் புலிகள் செல்வது முற்றாக மட்டுப்படுத்தப்பட்டது. இதற்குக் காரணம் இந்தியப் படையின் திறமை அல்ல. தேசவிரோதிகளின் துரோகம் தான்.

சுற்றிவளைப்புகள் மூலம் பிடிக்கப்படும் எமது ஆதரவாளர்களை இந்தியப் படை இந்தத் துரோகிகளிடம் ஒப்படைப்பர். உடனேயே வெட்டியோ, சுட்டோ கொல்லப்படுவர்.

தேசத்துரோகிகளின் கொட்டத்தை அடக்க எண்ணிய மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட விசேட தளபதி கருணா அம்மான் இந்தப் பொறுப்பை றீகனிடம் கொடுத்தார் தந்திரோபாயங்கள் மூலமும் தாக்குதல்கள் மூலமும் தேசவிரோதிகளின் பலத்தை றீகன் சிதறடித்தார்.

போராளிகள் ஒழுக்கம்- கட்டுப்பாடுகளில் சிறந்து விளங்க வேண்டும் என்பதில் கவனமாக இருக்கும் அதேவேளை போராளிகளை புலமை சார்ந்த செயல் வீரர்களாக உருவாக்குவதில் றீகன் எப்போதும் அக்கறையாக இருப்பார். இப்படித்தான் ஒருமுறை இந்தியப்படை வாகனத்திற்கென கண்ணி ஒன்று புதைக்கப்பட்டது ஒரு போராளியை அழைத்து றீகன் சொன்னார்; ''நாகேஸ்நீ தான்சரியான நேரத்தில் கண்ணியை வெடிக்கச் செய்ய வேணும்''. அதற்கு அந்தப் போராளி ''நான சரியாக அடிக்கமாட்டன் அண்ணை'' என்று அவநம்பிக்கைப்பட்டான். ஆனாலும் றீகன் அந்தப் போராளிக்கு உற்சாகமூட்டி அவரைக் கொண்டே கண்ணியை வெடிப்பிக்கச் செய்தார். அதில் ஒன்பது இந்தியப்படை பலியாகியது. இன்று அந்தப் போராளி ஒரு கண்ணிவெடி நிபுணனாகவே வளர்ந்துவிட்டான்.

இவ்விதம் ஆக்கிரமிப்புப் படைகளுக்கும், அடிவருடிகளுக்கும் றீகன் கொடுத்த அதிரடிகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

1989 மேமாதம் ஒரு நாள் அதிகாலை இறக்காமம் என்ற கிராமத்தை இந்தியப் படைகள் சுற்றிவளைதது விட்டனர். றீகனும இன்னுமொரு போராளியும் பொது மக்களுடன் சேர்ந்து பிடிக்கப்பட்டு விட்டனர். பதற்றமடையாத றீகன் தப்பியோடத் திட்டத்தை வகுத்து சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தான். கைது செய்யப்பட்டவர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டு அடையாளம் காணும் படலம் ஆரம்பமாகியது ஒரு முனையில் அமைதியாக நின்ற போராளியிடம் றீகனின் பார்வை செல்கின்றது. சைகையை விளங்கிக்கொண்ட அந்தப் போராளி தருணம் பார்த்து அருகிலிருந்த கரும்புப் பற்றைக்கூடாக ஓட்டமெடுக்கின்றான் அனைத்துப் படையினரது பார்வையும் அங்கே திரும்ப அதைப் பயன்படுத்தி றீகனும் நழுவி விடுகிறான்.

இது நடந்த சிலமணி நேரத்தின் பின்தான் தாங்கள் பிடித்தவர்களுள் ஒருவன்தான் இந்திய படைக்கும், தேசத் துரோகிகளுக்கும் சிம்மசொப்பனமாக இருந்த தளபதி றீகன் என்பதை அறிந்தவுடன் அந்த ஆத்திரத்தை அங்கு நின்ற மக்கள் மீதே காட்டினர்.

ஒரு மாவீரனை தப்ப வைத்த பெருமையில் இந்தியனதும், தேசத் துரோகிகளினதும் அடி உதைகளை வாங்கினர்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இந்தியப்படை உருவாக்கிய ரி.என். ஏ. என்ற கூலிப்படை தமிழ் மக்களை வாட்டி வதைத்து வந்தது.



1989ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்தியப்படை தமிழீழத்தைவிட்டு வெளியேறத் தொடங்கிய காலத்தில் இந்த கூலிப் பட்டாளத்தை நன்கு பலப்படுத்திவிட்டுச்செல்ல இந்தியா முயன்றது ஒரு நாட்டின் படைகள் பயன்படுத்தும் அதிநவீன-சக்திவாய்ந்த படைக்கலன்களை வழங்கி இக் கூலிப்படையை இந்தியா வளர்த்துவிட்டது. இந்தியப் படை வெளியேறியபின் இக் கூலிப்பட்டாளம் தனது சொந்தக்காலில் நின்று புலிகளுக்கெதிராகப் போர் செய்யும் என இந்தியா நினைத்தது.

அம்பாறை மாவட்டத்திலிருந்து இந்தியப்படை வெளியேறிய பின் இந்த துரோகிகளது கூடாரங்களைத் தகர்த்து அழிக்க புலிகள் திட்டம் தீட்டினர்.

அம்பாறை மாவட்ட அடர்ந்த வனத்தின் ஒரு பகுதியில் தேங்காய்ப் பூவால் நிலத்தில் வடிவமைக்கப்பட்ட துரோகிகளின் முகாம் அமைப்பைப்பற்றி தளபதி கருணா அம்மான் விளக்கிக்கொண்டிருந்தார். லெப். கேணல் றீகன், மேஜர் அன்ரனி உட்பட பல போராளிகள் அதை அவதானித்துக்கொண்டிருந்தனர். திருக்கோவில்பகுதியில் அமைந்திருந்த ரெலோ, மற்றும் ஈ.பி. ஆர். எல். எவ் முகாம்களின் மாதிரி அமைப்பே அதுவாகும்.

ரெலோ முகாமை மேஜர் அன்ரனியின் தலைமையிலும், ஈ. பி. ஆர். எல். எவ். முகாமை றீகனின் தலைமையிலும் சென்று தாக்கி அழித்து ஆயுதங்களை கைப்பற்றி வரவேண்டும் என்று கருணா அம்மான் தேவையான விளக்கங்களையும். ஆணைகளையும் பிறப்பித்துக்கொண்டிருந்தார்.

5-11-1989 அன்று திருக்கோவிலில் அமைந்திருந்த துரோகிகள் முகாம் இரண்டும் திட்டமிட்டபடி தாக்கிவெற்றி கொள்ளப்படுகின்றன. முகாமைவிட்டு பயந்தோடிய துரோகிகளை திருமலை எல்லைவரை றீகன் துரத்தி அடிக்கின்றான். திருமலையிலும் இதே வதைபடலம் துரோகிகள் மீது தொடர்கின்றது. இறுதியில் இந்தியப்படைகளுடன் சேர்ந்து இத்துரோகக் கும்பல்களும் இந்தியாவுக்குப் போய்ச் சேருகின்றனர்.

இந்திய ஆக்கிரமிப்புப்படைகளுக்கெதிரான போரில் மட்டக்களப்பு-அம்பாறை பிராந்தியத்தில் புலிகள் பெற்ற வெற்றிகளுக்கும், போராட்ட வளர்ச்சிக்கும் லெப். கேணல் றீகன் ஆற்றிய பங்கு அளப்பரியது. இந்தப் பிராந்தியத்தின் போராட்டவரலாற்றில் றீகனுக்கென்று ஒரு அத்தியாயம் உண்டு.

இந்தியப் படையின் வெளியேற்றத்துடன் தற்காலிக போர் ஓய்வொன்று வருகின்றது. இந்தவேளையில்தான் றீகன் ஒரு வீரன் மட்டுமல்ல, அவன் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்த ஒரு பண்பாளன் என்றும் மக்கள் காண்கின்றனர். அத்துடன் ஒவ்வொரு புலிவீரனையும் ஒழுக்கமும்-கட்டுப்பாடும் நிறைந்த போராளியாக நெறிபடுதது வதில்-வளர்ப்பதில றீகன் ஆர்வம் காட்டுகின்றான்.

புலிகள் இயக்கத்துடன் போர்நிறுத்தத்திற்கு இணங்கியிருந்த பொழுதிலும் சிங்களப் படையானது மறைமுகமாக ஒரு போருக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தது. 10-6-90 அன்று மீண்டும் போர் தொடங்கியது. ஆரம்பத்தில் சிங்களப்படை பலத்த இழப்புக்களை சந்தித்தது.

தென் தமிழீழத்தில் சிங்களப் படைக்கு ஏற்பட்ட பாரிய இழப்பைத் தொடர்ந்து அரசின் முழுப்பார்வையும் அங்கே திரும்பியது. பாரிய படையெடுப்புகளுக்கு உத்தரவிட்டது

இப்படித்தான் சண்டை தொடங்கி இரு மாதங்களின் பின் பாலையடி வெட்டை என்ற பகுதிக்கு முன்னேறி வருகின்ற படையினர்க்கு நல்ல பதிலடி கொடுப்பது என்ற திட்டத்துடன் கருணா அம்மானும். றீகனும் செயற்படுகின்றனர். இராணுவத்தின் நகர்வை, அதன் பலத்தை-பலவீனத்தை அறிந்துவர இன்னொரு போராளியையும் அழைத்துக்கொண்டு 16-7-90 அன்று றீகன் செல்கின்றார்.

அந்த வேளையில் எதிர்பாராதவிதமாக இன்னொரு முனையில்இருந்து எதிர்ப்பட்ட சிங்களப்படை றீகனைக்கண்டு விட்டு தாக்கத்தொடங்கியது. றீகன் குண்டடிபட்டு வீழ்ந்தார். றீகனால் நகர முடியவில்லை. றீகனைத் தூக்கிச் செல்லவும் மற்றப் போராளியால் முடியாமல் போய்விட்டது. இராணுவத்தினர் நெருங்கத் தொடங்கினர், றீகன் ஒரு மாவீரனைப்போல - புலிகளுக்கே உரித்தான வீரஉணர்வுடன் செயற்படத் தொடங்கினார், தனது இடுப்பில் கட்டியிருந்த கைத்துப்பாக்கியை சகபோராளியிடம் கழட்டிக் கொடுத்தார். இரகசியமான சில தகவல்களை கருணா அம்மானிடம் சென்று தெரிவிக்கும்படி சொல்லிவிட்டு சகபோராளியையும் தப்பிச் செல்லுமாறு ஆணையிட்டுவிட்டு சயனைட் அருந்தி வீரச் சாவடைந்தார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தின் ஒரு 'காவலரண்'

எல்லையிலேயே வீழ்ந்துவிட்டது. எதிரியிடம் அது உயிர்ப் பிச்சை கேட்டுப் பணியவே இல்லை.

எங்களுடைய றீகன் வீழ்ந்த இடம் எல்லை நிலம் தான். அதுதான் எங்களது விதை நிலமுமாகும்.

உறுதியை, வீரத்தை, ஒழுக்கத்தை எங்களுக்கெல்லாம் ஊட்டிய எங்கள் இதயத்தில் நிறைந்தவன் வீழ்ந்த இடம் விதைநிலம்தானே.

அந்த விதை நிலத்தில்-எல்லை நிலத்தில்-என்றோஒரு நாள் பட்டொளி வீசிப் பறக்கப்போகும் தமிழீழத்தின் தேசியக்கொடியில் உள்ள சிவப்பு நிறம் எங்களது றீகனின் கதையையும் சொல்லும்.

## அழியாத றீகனின் வரலாற்றுச் சிதறல்கள்

ஆட்களை அறிந்து அகமதை அளந்து
பழகுவதை உங்களின் ஆளுமை என்பேன்.
ஏனெனில் பகை எதிர் சண்டையில் உங்கள்
மன நிலை வெளியிட்ட முகநிறம் கண்டேன்.
அகதிகள் வந்தொரு குடியினை அமைத்து
ஆவலாய் அழைத்தனர் உங்களின் பெயரால்
மானம் காத்தவனே எங்கள் மாவீரனே
வெல்லாளின் மூத்த மகனே புலிக்கூட்டதளபதியே
எங்களின் வழிகாட்டியே முன்மாதிரியே உங்களின்
பின்னே இங்கொரு பேரணி; அங்கே தெரிவது மக்கள் அணி

## 2-ம்ஆண்டு நினைவஞ்சலி



### 2-ம் லெப். காண்டீபன்

(வைரவப்பிள்ளை உமாநேசன்)

மலர்வு: 15. 02. 1971 — வீரச்சாவு: 16. 07. 1991

நீமறைந்து ஈராண்டு நிறைந்ததடா
நேற்றையைப் போல் நினைவில் நிழலாடுகின்றாய்
திரும்புமிடமெல்லாம் உன் திருவுருவம்
இலங்குமடா ஈழ மண்ணின் வீதியெங்கும்


சிறப்புடனே போராடிச் செங்குருதி
சிந்தி உயிர் நீத்திடினும் ஈழ மண்ணில் இனிப்
புலிப்படையே தமிழ் மொழியை ஆட்சிசெய்யும்
போன புலி வீரருக்கும் வாழ்த்துச் சொல்லும்.

இவரையும் இவருடன் வீரச்சாவை அணைத்துக் கொண்டவர்களையும் இந்நாளில் நினைவு கூருகிறோம். 16 07 93 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு போராளிகளையும், உறவினர்களையும் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்

உடுத்துறை வடக்கு,
வடமராட்சி கிழக்கு. (5333)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### துணைப்படைவீரன் குட்டி

[கணேசலிங்கம் சபேஸ்]

தாயின் மடியில்: 1974-01-25 — தாயக விடிவில்: 1991-07-16

ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ - நீ
ஆனை இறவிலே ஆவியாகி
ஆயினும் உன்முகம் எம் நெஞ்சில்
அகலாதுள்ளது இன்று மட்டும்
ஆனை இறவுத் தளம் உடைத்து
அங்சோர் புலிக்கொடி ஏற்றிடவே
ஆயிரம் வேங்கைகள் அணிதிரண்டார்
அவர் பின் நீயும் தொடர்ந்தாயே
ஆதிக்க அன்னியன் சிறை உடைத்தே
அங்கோர் காவியம் படைத்தாயே.

உன்பிரிவுத் துயரில் நீங்காத
தாய், சகோதரர், உறவினர்,
நண்பர்கள்.

(5387)

## தொழிநுட்பக் கல்லூரி

இறுதிப்பரீட்சை

1992

படம்வரை பயிலுனர் (D.A.) தொழிற் பகுதி (Trade Courses) என்பவற்றுக்கான பரீட்சைகள் 1993-07-19-ம் திகதிஆரம்பமாகின்றன. தேர்வு நாடிகள் 1993-07-18-ம் திகதி மு.ப. 9.00மணிக்கு பகுதித் தலைவரிடம் தங்கள் மாணவர் பிரவேச அனுமதிச் சீட்டைச் சமர்ப்பித்து, தங்கள் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்.

தொழிநுட்பக்கல்லூரி.
யாழ்ப்பாணம்.
1993-07-14.

(சி-7016)

## பாராட்டுகிறோம்




1993ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கான மெய்வன்மைப் போட்டியில் 15 வயது பெண்கள் பிரிவில் முதன்மை வீராங்கனையாகச் சாதனை படைத்த யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலய மாணவி செல்வி வே. ஜெகதீஸ்வரி அவர்களைப் பாராட்டுகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபையினர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்

(சி-7012)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### சரோஜினிதேவி பத்மநாதன்

மலர்வு: 23-11-1939 — உதிர்வு: 16-07-1992

திதி: 04-08-1993

அன்பு துணைவியாய், அரவணைக்கும் தாயாகி, ஐயிரண்டு திங்கள் அங்கமெலாம் நொந்து பெற்று பாசத்தோடு எமை வளர்த்த அன்பு தெய்வமே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்று விட்டது.

எந்நாளும் மறவாது உங்கள் நினைவு.

- கணவர், பிள்ளைகள்,
சகோதரர்கள்.

கல்லூரி வீதி,
உரும்பராய் வடக்கு. (5386)

## 31-ம்நாள் கண்ணீர் அஞ்சலி



செல்வி

### சின்னத்தம்பி ஞானாம்பிகை

(சங்கீத ஆசிரியை)

வையகத்தில் ஞானா: 22-10-1966 — வானகத்தில் ஞானா: 16-06-1993

நந்தா விளக்கனைய நாயகியே! நம்மீது
மங்காத பாசம் வைத்தாய் எங்கள் மனம் நிறைந்து நின்றாய்
நீங்காத நினைவு தந்து சென்றதுதான் எங்கே ஞானா?
வந்த விதி வலிது என்று வானுலகு சென்றாயோ?
இனி ஒரு விதி செய்து வந்துவிடு வையகத்தில் எங்களுக்காய்
''நீறாக உடல் வெந்த போதும்
மாறாது உன் நினைவு வாழும் நாளும்''

அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்
திரு. மு. த. இராமசாமி
குடும்பத்தினர்.

கொடிகாமம் வடக்கு,
கொடிகாமம். (சி-7010)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் இளங்கோ
(கனகராசா ஜெயந்தன்)

பிறப்பு: 03. 10. 1972
வீரச்சாவு: 16. 07. 1991

ஈழ தேசத்தின் இளைய சிற்பியே!
சுதந்திரவேள்வியின் ஆகுதி நெருப்பே!
நம் தேசப்படத்தை
பூமிப் பந்தில் பொதிப்பதற்காய்
அக்கினிக்கனல் கொண்டு
அந்நியர் சிரமெடுக்க
மணலாறு மண்ணதனில்
சீறிப்பாய்ந்த புலி வீரா!
சுதந்திர சூரியனின் வருகைக்காய்
சுவாசப்பைகளின் சுவாசத்தையே கொடுத்தாய்
மண்ணின் மடியுறங்கும் மாவீர மகனே
உன் எண்ணம் மறையாது
உலகம் உள்ளவரை.

குடும்பத்தினர், நண்பர்கள்.

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

(5385)

## 31ஆம் நாளில் நெகிழும் நினைவலைகள்



மலர்வு: 22- 10- 1966

உதிர்வு: 16- 06- 1993

செல்வி
### சின்னத்தம்பி ஞானாம்பிகை
(இசைக் கலைமாணி சங்கீத கலாவித்தகி)

(சங்கீத ஆசிரியை யா/இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை - வரணி)

இன்னிசையுடன் நடனம்
இளஞ்சிறார்க்கு கற்பித்தாய்
ஓங்கு புகழ் பெற்றாய்
எங்கள் மனம் நிறைந்து நின்றாய்
ஒரு நாளில் எமைவிட்டு
ஓடி மறைந்தனையே - ஞானா
உன் இழப்பால் இன்று
உருகும் மாணவர் இசைநெறியில்
இருள் வந்து சூழ்ந்ததுவே - ஞானா
அம்பிகையின் அருள் பெற்று
ஞாலத்தில் இசை ஒலி பரப்ப
ஞாயிறென திங்களென மீண்டும் வாராயோ?
வரணியூர் வந்துதித்த - இசை
வித்தகியே நர்த்தகியே ஞானா!

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/இயற்றாலை
அ.மி.த.க. பாடசாலை,
வரணி.

(சி-7011)

## கொக்குவில்

க்கமாகக் கால் ஊன்றாவிட்டால் வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தையும் அள்ளிச் சென்று விடும் என்பதைப் பொறுப்பானவர்கள் மாணவர்களுக்கு உணர்த்தத் தவறியது விசனத்துக்குரியது.

புவியியல் மற்றும் சமூகக் கல்விப் பிரிவு என்ன சாதனைகள் புரிந்திருக்கிறார்கள்? பாடப்பரப்புக்கு வெளியே தொட்டும் தொடாமலும் எமது பிரதேசத்தைப் பார்த்திருக்கிறார்கள். 'யாழ் குடாநாடும் கிளாலிப் போக்குவரத்தும்' என்ற தலைப்பில் 11-C மாணவன் உ. உதயரூபன் ஒரு மாதிரி உருவைத்(Model) தயாரித்திருக்கிறார். கடலேரி சுற்றியுள்ள பிரதேசங்கள், போக்குவரத்துப் பாதை எல்லாம் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. பாராட்டப்பட வேண்டியவர் இவர். தமிமீழ வளங்கள், யாழ்மாவட்டத்தின் பிரதான கைத்தொழில்கள் ஆகியவற்றின் மாதிரி உருவை 12-D மாணவர்கள் கூடாகச் செய்துள்ளார்கள். லெப். குருபரன் கிராமத் திட்டத்தின் மாதிரி 11-C மாணவிகளான உமா மற்றும் கவீதாவின் கைத்திறனில் உருவாகியுள்ளன. பனைவளம், கே.கே.எஸ் சீமெந்து தொழிற்சாலைமாதிரிகள் உருவப்படுத்தப்பட்டுள்ளன. பாடத்திட்டத்திற்குப் புறம்பான இந்த வேலைகளைச் செய்ய சலிக்காது அனுமதி கொடுத்து, வசதிகள் செய்து கொடுத்த ஆசிரியர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இனி பௌதிக விஞ்ஞானப் பிரிவுக்குவருவோம். ஒலி, ஒளி, வெப்பம் என்ற பாடத்திட்டத்தோடு இணைந்த காட்சிப் பொருள்களுடன் தொடங்கி ஒளி உணர்ச்சியைக் கொண்டு (இலத்திரனியல்) செயலாற்றும் கருவி ஒன்றை உருவாக்கியுள்ளார்கள், படம் எறி கருவி Over head projector) என்ற உபகரணம் ஒன்று தயாரிக்கப்பட்டுப் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. இதில் மாணவர்களின் தொழில் நுட்பம் கையாளப்பட்டிருக்கிறது. யாழ். பல்கலைக் கழகத்தைத் தவிர இது தான் ஒன்று என்று கேட்க ஆச்சரியமாக இருக்கிறது. சுழல் நிலை காட்டி, இலத்திரனியல் எண்ணுகருவி, கை உலரவைக்கும் இயந்திரம் தொலைக்காட்டி, நுணுக்காட்டி என்பன மாணவர்களின் உருவாக்கம் பொருத்தப்பட்டுள்ள சில பொருள்கள் மாத்திரம் அன்னியமானவை.

விவசாயம் மற்றும் வாழ்க்கைத் திறன் பகுதியிலும் பல முன்னுதாரணங்களைக் காணக்கூடியதாக இருந்தது. விவசாயப் பிரிவில் சூரிய இனப்பெருக்கி, அடைபொறி, விலங்கு வளர்ப்பு முறைகள், அட்டாளை முறையில் ஆடுவளர்த்தல் மண் மாதிரிகள் எனப் பல காட்சிப் பொருள்கள் பள்ளிக்கூட நிலைமையுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட நிலையில் தொழில் நுட்பப் பிரிவின் காட்சிப் பொருள்கள் அமைந்துள்ளன.

அறையில் ஒரு மூலையில் மாணவர் ஒருவர் கம்பியூட்டரை இயக்கிக் கொண்டிருந்தார். அது சொல்லளவில் தான், செயலளவில் இல்லை. "இப்போது நிரந்தரமாக மின்சாரம் இல்லாததால் கம்பியூட்டர் வகுப்பு கல்லூரியில் கைவிடப்பட்டுள்ளது" என்றார் அந்த மாணவர். மாணவரின் கூற்று இன்றைய எமது கல்வியின் நிலையைக் குறிக்கிறது.

இறுதியில் வெளியேறும் வழியில் ஓர் உயர்சந்தை அது வர்த்தகப் பிரிவு மாணவர்களின் பல்பொருள் அங்காடி. சம்பிரதாய ரீதியாக அதிபரிடம் விடைபெற்ற போது, "உங்கள் மதிப்பீட்டை எழுதுங்கள்" என்றார்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 1963 — 01 — 06

வீரச்சாவு: 1991 — 07 — 16

### வீரவேங்கை குயிலன்
(இரத்தினம் வர்ணகுலசிங்கம்)

செல்லக்கிளி எனச் செல்வப்பு தல்வனாய்—பேர்
சொல்லச் சுரந்தன்பு ஈந்திங்கே வாழ்ந்திட்டாய்
நல்ல பல நண்பர்களால் குயிலன் எனபெயர் பூண்டாய்
வல்லவனே உன்செயலைக் கூற வார்த்தை இல்லைஐயா

மண்காக்க எழுந்திட்ட வேங்கைகளுடன் விடியலுக்காய்
கண்ணான தேசமீட்க கடும்பணி புரிந்திட்டாய்
மண்மீட்கும் வெடிகுண்டு தவறுதலாய் உன்னுடலைச்
சிதைத்தாலும்
எண்ணமெங்கும் நீயாகி ஈழக்காற்றில் நீவாழ்வாய்
இதய அஞ்சலிகள்.

இவருடன் மரணித்த வீரவேங்கைகள் வேல்ராஜ், தைரியம் ஆகியோருக்கும் எமது அஞ்சலி.

குயிலன் வீதி,
ஊறணி,
வல்வெட்டித்துறை.

அம்மா, ஐயா, அக்கா,
அத்தான், தம்பி, தங்கைகள்,
மருமகன், உறவினர்,
நண்பர்கள்.

(5367)

## நினைவில்நீங்காத ஈராண்டு



பிறப்பு: 01- 01- 1975

வீரச்சாவு: 16- 07- 1991

### 2-ம் லெப். மௌலி
[தாமோதரம்பிள்ளை மணிவாசகன் - சபேசன்]

வேங்கையே !
இத் தேசத்திற்கு
வெளிச்சம் வேண்டும்
என்று-
எழுந்து கொண்டவனே!
நீ
ஈரமாக நினைக்கப்படுகிறாய்!

உன் தியாகம்
தேசமெங்கும்
பேசப்படுகிறது!

எங்கே -
அந்தப் பாடல்...?
வானத்தின் பாதியை
நிறைப்பதற்கு
முன்னர் -
உன் சப்தம்
தேய்ந்து விட்டதே!

மௌலி!
இன்றைய
உன் மௌனம்
நாளை -
நம் தேசத்தில்
வார்த்தையாகி
ஆயிரம்
அர்த்தங்கள் தரும்!
இது - நிச்சயம்!

கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்,
உறவினர், நண்பர்கள்.

[ஸ்ரீராம கிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி அருகாமை]
[இ]

சிறுகதை

# என்கையால் என் கண்ணைக் குத்துவதா....?

வளளாயில் இருந்து புறப்பட்ட தேவன், அச்சுவேலி பஸ் நிலையத்தினையும் தாண்டி, பருத்தித்துறைவீதியூடாக யாழ் நகரை நோக்கி வந்து கொண்டு இருந்தார். வீதி நெடுக வந்த துவிச்சக்கர வண்டிகளுக்கும், இடையிடையே வந்த மோட்டார்வாகனங்களுக்கும் ஓரமாகி தனதுபயணத்தைத் தொடர்ந்தார். எனினும் அவரின் சிந்தனைகள் அவர் வலித்துக் கொண்டிருக்கும்சைக்கிளிலோ அல்லது வீதிகளிலோ இல்லை. இடையிடையே போராளிகளின் வாகனங்கள் தாண்டிச் செல்லும்போதுமட்டும் ஒருகணம், தன்னையுமறியாமல் தனது தலையை திருப்பிப் பார்ப்பார். அதைப்பற்றி அவருக்கு மட்டுமே அப்போது புரியக் கூடியதாக இருந்தது.

வெள்ளிககிழமையாகையால் நல்லூர் கந்தசாமி கோயிலில் பக்தர்கள் கூட்டம் நிறைந்து வழிந்தது. அக்கூட்டத்தில் ஒரு பக்தனாக உள்ளே நுழைந்த தேவன் ஒரு தடவை கந்தனின் வாசலை உற்றுப் பார்த்தார். மறுகணம் தன் கண்களை பக்தர் கூட்டத்துள் சுழல விட்டார். தேர்முட்டிக்கு அருகான நிழலில் அமர்ந்திருந்து நாட்டு நடப்புக்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் குழுவில் தானும் அங்கத்துவம் பெற்றார்.

''இண்டைக்கு மீசாலையில்பொம்பர் அடிச்சு சரியான சேதமாம்''

''ஓம் எண்டுதான் நானும் கேள்விப்பட்டனான்''.

''மீசாலை எவடத்தையாம்?'' குறுக்கிட்டார் தேவன்.

''மீசாலை எண்டுதான் கதைச்சவை, ஆனா எவடத்தை எண்டு சரியாத் தெரியாது. எதுக்கும் இரவைக்கு புலிகளின் குரல் கேட்டால் விளக்கமாகச் சொல்லுவாங்கள்''

''யார், யார் செத்திச்சினமோ?'' ஒரு பெருமூச்சுடன் தேவன்.

இப்படியே குழுவின் பேச்சுக்கள் தொடர்கின்றன. ஒரே விடயங்களை மெய்மறந்து பேசிக்கொண்டு இருந்தனர். விபரம் அறிய எண்ணி தேவன் எழுந்து தன் துவிச்சக்கர வண்டியை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

''மீசாலையில் பொம்பர் குண்டு போட்டதா?'' 'எங்குபோனால் நல்லது?' என எண்ணிக்கொண்ட தேவன் நேராக சரவணர் வீட்டை போனார். 'அங்கு வழக்கமாக மீசாலையில் படிப்பிக்கிற தர்மகுலசிங்கம் மாஸ்ரர் வருவார். அவரிட்ட இருந்து மேலதிக விபரங்கள்...' உசாரடைந்த தேவன் செட்டித்தெரு ஊடாகச் சென்று ஒழுங்கைக்குள் சைக்கிளைத் திருப்பி ரிட்டையர் சரவணர் வீட்டுப் படலையைத் திறந்து உள்ளே சென்றார்.

சரவணர் வளளாயி படிப்பிக்கும் போது தேவனுக்கு அறிமுகமாகி இருவரும் நெருங்கிப் பழகியவர்கள். பல வருடங்களாக இவர்களது சினேகிதம் இருக்கின்றது

''வாரும் தேவன் கோயிலாலை போல கிடக்கு''

''ஓம், மாஸ்ரர் அடுத்த கிளாலி ஓட்டத்திற்கு போக வேணும். பின்ன அதுக்குள்ள ஒருக்கா உங்களிட்டையும் வந்திட்டுப் போகலாம் எண்டுதான் ..''

''நானுமொருக்கா கோயிலுக்குப் போக வேணும், வெயில் தணியட்டும் போவம் எண்டுதான் வெளிக்கிட்டனான்; தர்மகுலத்தாரைப் பார்த்துக் கொண்டு இருக்கிறன்...''

''சிங்கம் மாமா வாறார் அப்பா'' சரவணரின் மிஞ்சி உள்ள ஒரே கடைசி மகள் வசந்தி கூறிவிட்டு உள்ளே செல்கின்றாள்.

''உங்களைப் பற்றித்தான் கதைச்சுக் கொண்டு இருக்கிறம். வாங்கோ மாஸ்ரர்''

''இண்டைக்கு என்பாடு பெரும் பாடாப் போச்சுது. இஞ்ச வீட்டிலும் ஒருவரும் சாப்பிடல்ல. இப்ப நான் வந்த பிறகுதான் எல்லாரும சாப்பிட்டவை'' என்று கூறிக்கொண்டு தர்மகுலசிங்கம் மாஸ்ரர் கதிரையில் அமர்ந்தார்.

''ஏன், என்ன நடந்தது?'' தேநீர் டம்ளர்களை தட்டில் ஏந்திய வண்ணம் வந்த சரணவர் மாஸ்ரரின் மனைவி அன்னம்மா கேட்டார்.

''இண்டைக்கு பொம்பர் எல்லோ அடிச்சவங்கள்''

''எந்த இடத்தில?''

''மீசாலையில் என்ர பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில''

''ஏன்? பள்ளிக்கூடத்திற்கு அடிச்சவங்களே?'' அன்னம்மா கேட்டார்.

''பள்ளிக்கூடத்திற்கு ஏனப்பா அடிக்கிறாங்கள் பக்கத்தில் 'காம்ப்' ஏதும் இருந்திருக்கும் அடிச்சிருப்பாங்கள், அது பள்ளிக்கூடத்தில விழுந்திருக்கும்'' சரவணர் கூறினார்.

பள்ளிக்கூடத்தில் விழவில்லை என்றும், பள்ளிக்கூடத்திற்கும் போராளிகளின் முகாமிற்கும் இடையில் நாலைந்து வீடுகள் இருக்கின்றன எனவும், அதில் இரண்டு வீடுகளுக்கு மேல் குண்டுகள் விழுந்ததனால் ஒரு வீட்டில் இருந்த தாயும், மகனும் இறந்துவிட்டனர் எனவும், இன்னுமொரு வீட்டில் ஏணைக்குள் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை இறந்துவிட்டது எனவும் வேதனையோடு கூறிமுடித்தார் தர்மகுலசிங்கம் மாஸ்ரர்.

''ஏணைக்க கிடந்த குழந்தையோ?'' துடிப்புடன்வசந்தி கேட்டாள்.

''ஓம் அம்மா''

இடையில் மிக அக்கறையோடு தேவன்...

''அப்ப பெடியளுக்கு ஒண்டுமில்லையோ?''

''அவங்களின்ட காம்பில விழுந்தால் தானே அண்ணே?''

''இவங்கள் எங்கையாவது, பெடியளின்ட காம்புக்கு சரியா அடிச்சவங்களே ? பள்ளிக்கூடங்கள், கோவில்கள், ஒண்டுமறியாததுகளின்ட வீடுகள், இதுகளுக்குத்தான் அடிப்பாங்கள்'' இது சரவணரின் குரல்.

''பள்ளிக் கூடத்தில இருந்து எத்தன யார்வரும், காம்பின்ர தூரம்?'' குலசிங்கத்தாரைப் பார்த்து தேவன் கேட்டார்.

''கிட்டத்தட்ட ஒரு நானூறு யார்வரும். ஆனால், பள்ளிக்கூடம் இருக்கிற ஒழுங்கைக்குப் பின் ஒழுங்கைக்கதான் காம்ப் இருக்கு''

''நாங்கள்இதிலகதைச்சுக்கொண்டு இருக்கிறம். செத்ததுகளின்ட குடும்பங்கள் என்னபாடுபடுங்கள்'' என்று தாயுள்ளத்தோடு தனது பெருமூச்சை விட்டார் அன்னம்மா.

''தமிழரின் தலைவிதியே இதுவாகிவீட்டுது'' என்று கூறிக்கொண்டு சரவணரும் எழும்ப, குலசிங்கம் மாஸ்ரரும் எழும்பினார்.

விரும்பியோ விரும்பாமலோ எல்லாவற்றையும் ஆமோதித்தவராக தேவனும் எழும்பி சகலரும் விடை பெற்றனர்.

'வளளாயில சனங்கள் கதைச்சதுக்கும், நல்லூர் கோயிலில கதைச்சதுக்குமிடையில எவ்வளவு வித்தியாசம்; கோயிலில கதைச்சதுக்கும் சரவணர் வீட்டில கதைச்சதுக்குமிடையில எவ்வளவு வித்தியாசம்? எண்டாலும் சரவணர் வீட்ட போனதாலதான்...' என தன் மனதிற்குள் எண்ணங்களை மீட்டுக் கொண்டு புதிதாக கட்டிய 'சீகோ 5' மணிக்கூட்டின் ரேடியத்தில் நேரத்தைப் பார்த்துக் கொண்டு வீட்டுப் படலையைத் திறந்தார் தேவன்.

2

முதல்நாள் இரவு கிளாலிப்படகில் வயோதிபப் பெண் கூறிய .........

'இண்டைக்கு எங்களுக்கு இந்தப் பிள்ளையளின்ர பாதுகாப்பு இல்லாட்டி நாங்கள் எப்படி இந்தக்கடலக் கடக்கிறது ?'

என்ற வார்த்தைகளை ஒருகணம் நினைத்துக் கொண்டு தாண்டிக்குளத்து சோதனைச் சாவடியையும் தாண்டி, வவுனியா நகருக்குள் செல்லும் பேரூந்தில் ஏறி நகரை அடைந்ததும் குறிப்பிட்ட அந்த தேநீர்க் கடைக்குச் சென்று ஒரு தேநீரை ஓடர் செய்துவிட்டு கடையில் உட்கார்ந்து தேநீருக்காகக் காவல் இருந்தார் தேவன். திடீரென 'காலம் பொன்னானது' என நினைத்துக் கொண்டவரார்காசாளரின் மேசையில் இருந்த தொலைபேசியை எடுத்து, குறிப்பிட்ட சில எண்களைச் சுழற்றி, யாருடனோ நான்கு வார்த்தைகள் பேசிவிட்டு ஒருதடவை நேரத்தைப் பார்த்துவிட்டு மீண்டும் கதிரையில் அமர்ந்து தேநீரைப் பருகிவிட்டு தேநீருக்கும், தொலைபேசிக்குமான பணத்தைக் கொடுத்துவிட்டு கடையைவிட்டு வெளியேறி வவுனியா மகாவித்தியாலயத்தை நோக்கி கண்டி வீதியால் நடந்து கொண்டு இருக்கையில். திடீரென ஒரு 'ஏ — 40' கார் இவர் அருகில் வந்து மெதுவாக சத்தமின்றி நின்றது. காரில் இருந்தவர் தலையை வெளியே எட்டி ஒரு சிறிய சிரிப்பை உதிர்த்தார். தேவன் காரில் ஏறிக் கொண்டார். காரின் சாரதியும், முன் சீற்றில் அமர்ந்திருக்கும் கருணாவும் ஏற்கனவே பல தடவைகள் தேவனுக்கு அறிமுகமானவர்களே! மூவரும் அமைதியாகவே இருந்தனர். அமைதியாக ஓடிக்கொண்டிருந்த கார் தார்வீதியை விட்டு மண்வீதிக்கு மாறியது. அரச அலுவலர்களுக்கு எனக் கட்டப்பட்ட தங்குவிடுதிகள் அமைந்திருந்த வீடுகளில் ஒன்றில். கார் நின்றது.

கருணாவும், தேவனும் இறங்கிக் கொண்டதன்பின்னர் கார்விரைந்தது. இருவரும் உள்ளேசென்றுஅமர்ந்தனர்.

''எப்புடி அண்ணே உங்களுக்கு பிரச்சின ஒண்டும் இல்லையா?''

''என்ன எல்லாப் பக்கத்தாலயும் பிரச்சினைதான், என்ன செய்யிறது?''

''நீங்கள் ஒக்கே எண்டா சரி, அதிங் அப்புறம் ஒங்கட வீடு எங்கட பவுன்றிக்க. அதிங்கப்புறம் உங்களுக்கு பிரச்சன எதிங் இல்ல''

''சரி இதில பாருங்க.. வளளாய் பக்கம் நிக்கிற எல். ரி. ரி பெடியள், எங்கெங்க அவங்கட சென்ரி எதிலை வெளி கூட, அவங்கட நடமாட்டங்கள் எப்பிடி என்ற சகல விபரமும் இருக்கு. நீங்க எப்ப வெளிக்கிடுவீங்க எண்டது எனக்கு தெரியவேணும். அண்டைக்கு நான் வீட்டில இருக்கணும்'' ..

''அதிங் நான் சொல்லுவேன். நீங்க அவசரப்படவேணாம். அதுசரி, போன கெலம மீசாலையில குண்டு போட்டம் தானே? அதிங் ஈலதாதங் பேப்பரில வந்த மாதிரியா? உறுதிப்படுத்தும் எண்ணத்துடன் கருணா.

''அதே மாதிரித் தான், அதில மாற்றம்இல்லை,',உறுதிப்படுத்தினார்

''அந்தஎடம்ஒங்களுக்குதெரியுமா?

''சரியாத் தெரியாது கேள்விப்பட்டனான்''

எனக்கூறிய தேவன் குலசிங்கம் மாஸ்ரருடன் பேசிக்கொள்ளும்போது தனக்குக் கிடைத்த விடயங்களை அவருக்கு தெரியப்படுத்தினார்.

''சரி நெக்ஸ் டைம் நான் கொடுக்கிற வேலையோட, அதிங் கூட பாத்திட்டுவாங்க சரியா'' இது தேவனுக்கான பணிப்பு.

மீண்டும் அதேகார் வந்தது. அதில் சாப்பாடு வந்தது. தேவன் சாப்பிட்டார். யாழ்நகர விபரங்களும் பணமும் பரஸ்பரம் பரிமாறப்பட்டது. காரில் தேவன் ஏறினார். சாரதி மட்டுமே வந்தார்.வவுனியா பஸ் நிலையத்தில் இறங்கினார். நகரக் கடைக்குள் சென்று சில பொருள்களைப் பெற்றார். வழக்கமாகத் தங்கும் இந்து இளைஞர் மன்றத்தில் பிரயாணிகளோடுஒருபிரயாணியாகத் தங்கினார். மறுநாள் ஓமந்தை வந்து சேர்ந்தார்.

3

பூநகரி - நல்லூரில் இன்றாவது படகுப் பிரயாணம் நடைபெறும் என்ற எதிர்பார்ப்பில் ஐந்தாவது நாளாகக் காத்திருந்த ஆயிரக்கணக்கான யாழ் பிரயாணிகளில் ஒருவராக தேவனும் காத்து நின்றார். பிரயாணிகள் தமக்குள் பேசிக் கொண்டனர்.

''இண்டைக்கு எப்பிடியும் படகு ஓடுமாம்''

''என்னெண்டு சொல்லுறது இரவும் பெடியளுக்கும், நேவிக்கும் நல்ல சண்டை நடந்திருக்கு''

''நேற்று எங்கட பிள்ளைகளில் ரெண்டு பேருக்கு காயமாம்''

''ஒரு அண்ணாவிற்கு சீரியஸாம்''

ஒரு சிறுமி. இப்படியான பேச்சுகளுக்குப் பின்னர் படகு ஓடும் என்று உறுதிப்படுத்தப்பட்டு பிரயாணிகள் அலைமோதிக் கொண்டு இருக்கையில் தான் அந்தப் பயங்கரம் நடந்தது. சிறிலங்கா கடற் படையினரால் ஏவப்பட்ட செல் கள் கரையில் விழுந்து வெடித்தன. மக்கள் எல்லோரும் அல்லோலகல்லோலப்பட்டனர் பலர் காயப்பட்டனர் காயப்பட்டவர்களில். சிறுகாயம் பட்டவர்கள் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். ஏனையவர்கள் உடனடியாக படகுகளில் ஏற்றப்பட்டு, கிளாலிக் கரைக்குக் கொண்டு வந்து, பின்னர் தனியார் வாகனங்கள் மூலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கும், யாழ்போதனா வைத்திய சாலைக்கும் எடுத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் தேவனும் ஒருவர். தேவன் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மறுநாள் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றதன் பின்னர் உயிருக்கு ஆபத்தானகட்டத்தைத் தாண்டி காயப்பட்ட இடங்களிற்கெல்லாம் கட்டுப்போட்டபடி கட்டிலில் படுத்திருந்தார். ''காயங்கள் தேறிவிடும், எனினும் நன்றாக நடக்கமுடியாது'' என பத்திரிகையில் பெயர், விபரம் பார்த்துத் தெரிந்துகொண்டு பார்வையிட வந்த சரவணர் மாஸ்ரருக்குக் கூறினார். காரணம் சிறிலங்கா ஆக்கிரமிப்பாளர்களால் ஏவப்பட்ட செல்லின்ஒரு சிறுதுண்டுதேவனின் கால் பகுதியைக் தாக்கியதால் அவரது ஒரு கால் இயங்காத நிலை ஏற்பட்டுள்ளது.

4

மதிய நேரம் சரவணரின் ஒத்துழைப்புடன் கிணற்றடியில் குளித்துவிட்டு தனது ஊன்றுகோல்களினது உதவியுடன் மிக சிரமத்தோடு வீட்டு வாசலை அடைந்த தேவன் வழக்கமான புலம்பலை ஆரம்பித்தார்.

''தேவன் சாப்பாடு எடுக்கட்டே'' இரக்கத்தோடு கேட்டார் அன்னம்மா

''பசிக்கயில்லையக்கா''

மீண்டும் வழக்கமான புலம்பலை ஆரம்பித்தார் தேவன்.

''இண்டைக்கு வளளாய்க்கு ஆமி வந்து ஆறுமாதமாகிவிட்டுது. நானும் என்ர பெண்சாதி பிள்ளைகளைத் தேடி அலையாத அகதிமுகாமே இடையாது''.

**ரகுராம்**

அப்போது

''அக்கா, அக்கா .........''

மீண்டுமொருமுறை

''அக்கா, அக்கா .....'' படலையில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு அன்னம்மா மகளிடம் ''வசந்தி படலைக்க யாரோ கூப்பிடுகினம், பாரம்மா'' எனக் கூற, மகள் படலைக்கு வர ... ...

''அக்கா பசிக்குதக்கா'' கிட்டத்தட்ட 10 வயது மதிக்கதித்தக்க ஒரு சிறுமி. பக்கத்தில் 7 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன். இருவரையும் பார்த்தவுடன் இரக்கங்கொண்ட வசந்தி உள்ளே அழைத்துச் சென்று பனாமரத்தின் கீழ் உட்கார வைத்து உணவு பரிமாறிக்கொண்டு .........

''நீங்கள் எங்க இருக்கிறனியள்?''

''அரியாலை என்ட இடத்தில்'' மழலைகள் இருவரும் ஒரே நேரத்தில் பதிலளித்தனர்.

'உங்கட அப்பா, அம்மா எல்லாரும் எங்க ?''

''அப்பா கொழும்புக்குப் போனவர் இன்னும் திரும்பி வரவில்லை அம்மாவையும், அக்காவையும் ஆமிக்காரர் புடிச்சுக்கொண்டு போயிட்டினம். நானும், தம்பியும்தான் அப்பப்பாவோட தப்பி வந்தனாங்கள். அப்பப்பா இப்ப நடக்கமாட்டார். அவர் அகதிமுகாமில் இருக்கிறார்'' என்று மூச்சு விடாமல் கூறிமுடித்தாள் சிறுமி.

ஏதோ எண்ணிய தேவன் பலாமரத்தடியை நெருங்கினார்.

''அப்பா இந்தமுறைவவுனியாவிஸ் ஸுக்குப் போட்டுவரேக்கே எனக்குப் பள்ளிகூடம் போறத்துக்கு சயிக்கிள் எடுத்துட்டு வரோணும்.''

தான் கடைசியாக வீட்டைவிட்டுப் புறப்படும்போது அந்தப் பிஞ்சு உள்ளம் கூறியது அவனுக்கு .. ... நினைத்துக் கொள்கிறான்.

சில நிமிடத்தில் அயலில் உள்ள சிலர் கூடிவிட்டனர்.

மாலை நான்கு மணியளவில் சரவணர் குடும்பத்தினர் படலைவரை வந்து வழியனுப்பி வைத்தனர். ஊன்று கோல்களை ஊன்றிய தேவன் நடக்கவாரம்பித்தார். அவரின் பின்னால் இரு பிஞ்சுகளும் நடந்து சென்றனர். சொந்த ஊரை, தனது மண்ணை, இழந்த தேவன் தன் சந்ததி தன்னைப் பின்தொடர தந்தை இருக்கும் முகாம் நோக்கிச் செல்கிறார்...

# வடமராட்சியில்

## வகுப்புகள் ஆரம்பம்

## COLLEGE OF NEPTUNES

பருத்தித்துறை வீதி, நெல்லியடிச் சந்தி.

## A/L 94/95

பொருளியல்
**வரதராஜன்**
03-08 செவ்வாய்க்கிழமை-காலை 9.00 மணி

இந்து நாகரிகம்
**குமுதினி**
20-07 செவ்வாய்க்கிழமை-மாலை 8.00 மணி

தமிழ் இலக்கணம்
**நவம்**
17-07 சனிக்கிழமை-காலை 8.00 மணி

கணக்கியல்
**எ. பிரபாகரன்**
17-07 சனிக்கிழமை-மாலை 2.00 மணி

**O/L93** பரீட்சையிற்கு
**துரிதமீட்டல்-வினாவிடை**
20-07 செவ்வாய்க்கிழமை-மாலை 8.00 மணி

இரசாயனம்
**சதீஸ்**
25-07 ஞாயிற்றுக்கிழமை-மாலை 2.00 மணி

அளவையியல் - II
**நவம்**
18-07 ஞாயிற்றுக்கிழமை-காலை 8.00 மணி

தமிழ் - இலக்கியம்
**கணேசலிங்கம்**
29-07 வியாழக்கிழமை-மாலை 8.00 மணி

வர்த்தகம்
**நாதகோபாலன்**
24-07 சனிக்கிழமை-மாலை 4.00 மணி

**இசை கருவிகள் வகுப்புகள்**
**சிவகுமார்**
20-07 செவ்வாய்க்கிழமை-மாலை 8.00 மணி

வகுப்புக்களிற்கு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலேயே மாணவர் அனுமதிக்கப்படுவார்களாதலால் பதிவின் அடிப்படையிலேயே முன்னுரிமை வழங்கப்படும்.

(5378)

# 'சுவர்க்கம்போல அழகான தீவும் அங்கு வசிக்கும் அசிங்கமான மனிதர்களும்'

**பு**த்தபிரான் போதித்தார்.

தோற்றம், மாற்றம், மறைவு என்ற சூட்சுமச் சுழற்சியில் காலம் நகர்கிறது. ஓய்வில்லாமல் ஓடிக் கொண்டிருக்கும் கால நதியில், கணத்திற்குக் கணம் தோன்றிமறையும் குமிழிகள் போன்றது மனித வாழ்க்கை. இந்த நிலையற்ற வாழ்க்கையில், பிறப்பிலிருந்து இறப்பு வரை, துக்கத்தின் பளுவைச் சுமந்து நிற்கிறான் மனிதன். நோயும் பிணியும், உடல் நலிந்த முதுமையும், சாவுமாக, மனித வாழ்வு சோகத்தில் தோய்ந்து கிடக்கிறது. மனித துயரங்களெல்லாம் ஆசையிலிருந்து பிறப்பு எடுக்கின்றன. ஆசைகள் எல்லாம் அறியாமையிலிருந்து தோற்றம் கொள்கின்றன. ஆசையின் பிடியிலிருந்து மீட்சி பெறாதவரை சோகத்தின் சுமையிலிருந்து மனிதன் விடுபட முடியாது. உனக்கு உள்ளே, உனது அக உலகத்தில், பொய்யாகக் கவிந்து கிடக்கும் அறியாமை இருளிலிருந்து நீ விடுதலை பெறுவதாயின் மெய்ஞ்ஞான வெளிச்சத்தைத் தேடிக் கொள். அந்த ஞானோதயத்தில் தான் உனக்கு விடிவுண்டு.

தர்மத்தின் மகத்துவம் பற்றியும் சித்தார்த்த முனிவர் போதித்தார்.

இந்தப் பிரபஞ்சமும் சரி, மனித வாழ்வியக்கமும் சரி, தர்மத்தின் சக்கரத்திலேயே சுழல்கிறது. பிரபஞ்ச ஒருங்கிசைவிற்கும் இன்னிசைவான மனித வாழ்விற்கும் தர்மம் ஆதாரமானது. அன்புறவில், சகோதரத்துவ பண்புறவில் பின்னப்படும் மனித உறவுகளில் சமூக தர்மம் தழைத்தோங்கும்.

பௌத்தம் ஓர் ஆழமான ஆன்மீக தரிசனம். அன்பையும் அறத்தையும், ஆசைகள் அகன்ற பற்றற்ற வாழ்வையும், தர்மத்தையும் வலியுறுத்தி நிற்கும் தார்மீக தத்துவம். இந்தத் தார்மீக மரபில், இந்த ஆன்மீக கருத்துலகில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வேரூன்றி வளர்ந்த சிங்கள மனிதனின் மனவமைப்பில் மிகவும் கொடிய இனவாத விஷம் புகுந்து கொண்டது எப்படி? மிருகத்தனமான வன்முறை கோரத் தாண்டவம் ஆடுவது எங்ஙனம்?

இந்தக்கேள்விகளுக்கு விடைகாணும் முயற்சியாக அண்மையில் ஒரு நூல் வெளிவந்திருக்கிறது. 'மனிதன் மட்டுமே இழுக்கானவன்' (ONLY MAN IS VILE) என்ற விசித்திரமான தலைப்பில் அமெரிக்க பத்திரிகையாளரான வில்லியம் மக்கோவன் இந்தநூலை எழுதியிருக்கிறார்.

சுவர்க்கம்போல, இது ஒரு அழகான தீவு. இங்கு எல்லாம் நிறைவாக இருக்கிறது ஆனால் இங்கு வசிக்கும் மனிதர்களோ அசிங்கமானவர்கள், இழுக்கானவர்கள். இப்படியாக கிறிஸ்தவ ஆயர் ஒருவர், அன்றொரு காலம் ஆயிரத்து எண்பதுகளில், சிங்களவர்களின் குணவியல்பு பற்றி குறிப்பிட்டிருந்தார். இந்தப் பண்புருவ சித்திரத்தை, சமகால கடந்தகால வரலாற்று நிகழ்வுகளை ஆதாரமாகக்காட்டி எடுத்து விளக்க முயல்கிறார் மக்கோவன். இந்த நூலை ஒரு 'சீரியஸான' வரலாற்று ஏடாக கொள்ள முடியாது. அந்த ஆய்வு முறைமையில் இது எழுதப்படவில்லை. இதனை ஒரு அங்கத சித்திரமாக (Satire) ரசிக்கலாம். ஒரு வெளிநாட்டு பத்திரிகையாளன், அதுவும் ஒரு இளம் அமெரிக்க எழுத்தாளன், தனது பண்பாட்டு உலகின் வரம்பிற்குள் நின்றபடி, சிங்களவர்களின் சிதைந்து போன நாகரிகத்தையும் அவர்களின் இன்றைய அவலநிலையையும் மிகவும் வியப்புடனும் திகைப்புடனும் பார்ப்பது போல இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது, இலங்கையின் இனப்பிரச்சினையின் அடிப்படைகள் எதையும் ஆழமாகத் தொடாமல், சிங்களப் பேரினவாத கருத்துநிலை ஆதிக்கத்தையும், அதன் தோற்றப்பாடாகதலை விரித்தாடும் சிங்கள அரசியல் வன்முறையின் அசிங்கமான முகத்தையும் வரைந்துவிட முனைகிறார் ஆசிரியர்.

மகாவம்சம் புனைந்துவிட்ட புரளிகளால் சிங்கள இனம்வழி தவறிச்சென்று பேரினவாதப் படுகுழிக்குள் விழுந்து விட்டதாக எழுதுகிறார் நூலாசிரியர். பௌத்தத்தில் புராணக் கதைகளைப் புகுத்தி, கௌதமரின் மெய்யியல் தரிசனத்தை சிதைத்தது மட்டுமல்லாமல், சிங்களவரின் வரலாற்றையும் மகாவம்சம் தலைகீழாக திரித்துவிட்டிருக்கிறது, ஆதி திராவிட மக்கள் கூட்டம் ஒன்றை தூய ஆரிய இனக் குழுவெனத் திரிபுபடுத்தி ஒரு பொய்யான எண்ணக்கருவை ஆழமாகவிதைத்து விட்டது. பரிசுத்தமான மதம், பரிசுத்தமான இனம், பரிசுத்தமான பூமி என்ற ரீதியில் மதவாதமும், இனவாதமும், தேசியவாதமும் ஒன்று கலந்த ஒருவிபரீதமான பேரினவாதக் கருத்துலகம்படைக்கப்பட்டது சிங்கள இனம் தனது மூலத்தையும், தனித்துவத்தையும் தவறாகக் கற்பிதம் செய்வதற்கு மகாவம்சம் வழிகோலியது. இந்தப் புராணத்துப் பொய்யை இன்றைய சிங்கள புத்திஜீவிகளும், வரலாற்று ஆசிரியர்களும் ஆதாரமின்றி, விசாரணையின்றி விழுங்கிக் கொண்டதாகவும் நூலாசிரியர் விமர்சிக்கிறார்.

சிங்கள பௌத்த பேரினவாதம் இன்று ஒரு தேசிய சித்தாந்தமாக சிங்கள தேசத்தில் மேலாதிக்கம் செலுத்தி வருகிறது என்கிறார் நூலாசிரியர். இந்தக் கருத்தாதிக்க எழுச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் வித்திட்டவர்களில் முதன்மையானவர் அனாகரிக தர்மபாலா. இவர் மகாவம்ச புராணத்திற்கு உயிரூட்டி, ஒரே நாடு, ஒரே இனம், ஒரே மதம் என்ற ரீதியில் பேரினவாதப் பூதத்தைத் தட்டி எழுப்பினார். பண்டாரநாயக்கா பேரினவாதத்தை அரசியல் மயப்படுத்தினார். இன்று இந்தக் கருத்தாதிக்கம் பாடசாலைகள், பல்கலைக்கழகங்களிலிருந்து பத்திரிகைத்துறை வரை ஊடுருவி நிற்கிறது. மாணவனோ, புத்திஜீவியோ, எழுத்தாளனோ சுயமாக சிந்திக்க முடியாதவாறு சிங்கள மூளையத்தை இந்தக் கருத்துலகம் சிறைப் பிடித்து வைத்திருக்கிறது. பௌத்த பண்பாடு என்ற பெயரில் இங்கு பெரியதொரு கலாசாரச் சீரழிவு ஏற்பட்டிருக்கிறது எனக் குறிப்பிடும் நூலாசிரியர் அன்றொரு காலம் தர்மத்தின் இருப்பிடமாகத் திகழ்ந்த இந்தத் தீவு.இன்று இனவாத நரகமாக மாறிவிட்டது என்கிறார்.

இந்திய - இலங்கை ஒப்பந்த காலகட்டத்தில் இலங்கையில் தங்கியிருந்த சமயத்தில் தான் நேரில் கண்டவற்றையும், மற்றவர்கள் மூலம் அறிந்து கொண்டதையும் சம்பவக் கோவையாகத் தொகுத்துக் கதை சொல்லும் நடையில் சுவாரஸ்யமாக இந்நூலை எழுதியிருக்கிறார் மக்கோவன். வடகிழக்கில் இந்திய-புலிகள் யுத்தமும், தெற்கில் ஜே.வி.பியின் கிளர்ச்சியும் நேரில் கண்ட விபரணையாக சித்திரிக்கப்படுகின்றன. இந்திய இராணுவம் யாழ்ப்பாணம் மீது நிகழ்த்திய படையெடுப்பும் விடுதலைப் புலிகளின் துணிவுமிக்க எதிர்ப்பியக்கமும், மக்களின் அவலங்களும்இந்நூலில்மேலெழுந்தவாரியாக, செய்தி அறிக்கை போலப் பதிவாகிறது. யாழ்ப்பாண யுத்தச் செய்திகளைத் திரட்ட வேண்டுமென்ற ஆவலில் குடாநாடு வந்த போதும், போர்ச் சூழலைக் கண்டு பயந்து அவசர அவசரமாக திரும்பிச் சென்றுவிட்டதால் இந்திய-புலிகள் யுத்தத்தின் காரணிகளையோ அன்றி இந்திய இராணுவ அட்டூழியங்களையோ இவரால் செம்மையாக சித்திரித்துக் காட்ட முடியவில்லை.

21-10-1987 அன்று, நானும் யோகியும் இந்தநூலாசிரியரை வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சிலருடன் வடமராட்சியில் ஒருவீட்டில் சந்தித்தோம். போர் நிலைமையை விளக்கி பேட்டி நடந்துகொண்டிருந்த போது யாழ் போதனா வைத்தியசாலையில் அன்று நிகழ்ந்த படுகொலைச் சம்பவம் பற்றி எமக்கு தகவல் கிடைத்தது. இந்திய இராணுவத்தின் இந்த அட்டூழியத்தை நாம் இப் பத்திரிகையாளருக்கு கூறியபோது எவருமே அதை நம்பவில்லை. இந்தச் செய்திக்குத் தகுந்த சான்றுகள் வேண்டுமென மக்கோவன் வலியுறுத்தினார். இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட வைத்தியர் ஒருவரை அழைத்து வந்து பேட்டிகொடுக்க நாம் ஏற்பாடுசெய்தோம். ஆனால் அதுவரை தம்மால் காத்திருக்க முடியாது என்றும் உடனடியாகக் குடாநாட்டைவிட்டு வெளியேறவேண்டுமென்றும் இப் பத்திரிகையாளர்கள் அடம் பிடித்தனர். நாம் மன்றாட்டமாகக் கேட்டும் பயனேற்படவில்லை. அன்று யாழ்ப்பாண நிலத்தில் கால் வைக்காது பறக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டுநின்றவர் இந்த அமெரிக்க பத்திரிகையாளர். இந்திய இராணுவத்தின் படுகொலைகள் பற்றி வதந்திகள் கிடைத்ததே தவிர, சான்றுகள் கிடைக்கவில்லையென ஐயப்பாட்டுடன் இந்த நூலில் இவர் குறிப்பிட்டிருக்கிறார். பயத்தில் பறக்கும் பத்திரிகையாளனுக்கு சான்றுகள் எப்படிக் கிடைக்கும்?

தமிழரின் தேசிய பிரச்சினையும் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டமும், அவற்றின் ஆழமான பரிமாணங்களில் அலசப்படாமல் மேற்புல் மேய்ச்சலாகத் தொடப்பட்டிருக்கிறது. தனது அவதானிப்பை விட மற்றவர்களது கணிப்புகள், மதிப்பாய்வுகளை ஆதாரமாகக்கொண்டே மக்கோவன் இந்த நூலை எழுதியிருக்கிறார். பௌத்த பேரினவாதத்தின் கோரத் தாண்டவமும், அது பிரவாகம் எடுக்கும் சிங்கள மனிதனின் மனவியல்பும் நூலாசிரியரின் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

இது ஒரு கனமான ஆய்வு நூல்அல்ல. சாதாரண வாசகனைக்கவரக்கூடியஇலகுமொழியில் எழுதப்பட்டிருக்கும் இந்நூல் சிங்கள பௌத்த பேரினவாதத்தை மேற்குலகத்திற்கு அறிமுகப்படுத்தி வைக்கிறது. சாதாரண மேற்குலக வாசகன் சிங்கள வன்முறை அரசியலின் பின்னணியைப் புரிந்து கொள்ள இது உதவும்.

இந்த நூல் கொழும்பு அரசியல் வட்டத்தில் ஒரு சிலுசிலுப்பை ஏற்படுத்திவிட்டிருக்கிறது. புனித மதத்தையும், தூய ஆரிய கோட்பாட்டையும் இந் நூல் நகைப்பிற்கு இடமாக்கியிருப்பதால் பேரினவாதிகள் கொதிப்படைந்திருக்கிறார்கள்.

"இது ஒரு அபத்தமான குப்பை. வாசித்து முடிந்ததும் இந்தப் புத்தகத்தை குப்பைத் தொட்டிக்குள் வீசி எறிந்து விட்டேன்" என்று ஒரு பிரபல சிங்கள எழுத்தாளர் தனது மதிப்பாய்வில் கோபத்தைக் கொட்டியிருக்கிறார்.

என்றாலும் மேற்குலகில் தமிழர்கள் இந்நூலை தேடிப் பெற்று வாசித்து ரசிப்பதாக எனதுநண்பர்ஒருவர்கூறினார்.

**பிரம்மஞானி**

# பிரேமதாசாவின் பாதுகாப்பு வியூகம்; வீரகுமாருடன் உரையாடப்பட்டதா?

**சி**றிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் கொலை தொடர்பாக சந்தேகிக்கப்படும் வீரகுமார், பிரேமதாசவுடன் கொண்டிருந்த நெருக்கம் எத்தகையது என விசாரிக்கும் சிறிலங்காவின் புலனாய்வுக் குழுவினர் தாம் ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றுவிட்டதாக தெரிவிக்கின்றனர்.

இறுதியாக தமக்கு கிடைத்த தகவலின்படி, பிரேமதாச கொலை செய்யப்பட்ட தினத்தன்று அவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கையின் ஒவ்வொரு அசைவும் வீரகுமாரின் முன்னிலையிலேயே திட்டமிடப்பட்டிருக்க வேண்டும் என உறுதியுடன் நம்புகின்றனர்.

வீரகுமார் யார்? என்பது குறித்தும் அவர்எவ்வாறு பிரேமாவுடன் நெருக்கமானார்? என்பதுகுறித்தும்கண்டுபிடிக்க என நியமிக்கப்பட்ட புலன் விசாரணைக்குழுவினர், இவரின் புகைப்படம் பிரேமாவின் தனிப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் மொகைதீன வீட்டில் இருப்பதைக்கண்டு ஆச்சரியமுற்றனர்.

1991ஆம் ஆண்டு பகுதியில் இவர் கொழும்பிற்கு வந்ததாகவும் பிரேமதாசவின் சொந்த வீடாகிய 'சுசரித்த' இல்லத்துக்கு அருகே ஒரு சிங்களவரின் கடையொன்றில் வேலைக்குச் சேர்ந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீரகுமார் அந்தக் கடையில் சேர்ந்து கொண்டதில் இருந்து கடையின் வியாபாரம் பெருகி வருமானம் அதிகரிக்கத்தொடங்கியது. கடை முதலாளியின் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்ட இவர், அப்பகுதியில் செல்வாக்கு பெறத்தொடங்கினார். படிப்படியாக கடையின் மதிப்பு அதிகரிக்கபெரும்புள்ளிகள் வாடிக்கையாளராகத் தொடங்கினர்.

எப்படியோ பிரேமதாசவின் தனிப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் மொகைதீனின் நட்பைச் சம்பாதித்துக் கொண்ட அவர், மொகைதீனின் பலவீனத்தை உபயோகித்து அந்த நட்பை வலுப்படுத்திக் கொண்டார் எனவும், மொகைதீனின் குடும்ப நண்பராக ஆகிவிட்டார் எனவும் புலனாய்வுத் தகவல்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளதென பொலிசார் தெரிவிக்கின்றனர்,

மொகைதீனின் நட்பைப் பயன்படுத்தி பிரேமதாசவின் 'சுசரித்த' இல்லத்திற்கு நுழைந்த வீரகுமார் அங்குள்ள சமையல்காரரிலிருந்து பாதுகாப்பு அதிகாரிகள், ஏன் பிரேமதாச வரை அனைவரினதும் நெருங்கிய நட்பைச் சம்பாதித்துக் கொண்டார். பிரேமாவின் பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்டிருந்த அதிரடிப்படை அதிகாரியின் வாகனத்தை இரவலாகப் பெறுமளவிற்கு வீரகுமாரின் செல்வாக்கு 'சுசரித்த'வில் வளர்ந்தது.

வீரகுமார் ஜனாதிபதிபிரேமதாசவுடன் ஆறு தடவைகளுக்கு மேல் சுற்றுப்பயணங்களில் பங்குபற்றியிருப்பதாகத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது. பல தடவைகள் இவ்வாறு சென்றிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றபோதிலும் இறுதியாக பிரேமதாச உலங்கு வானூர்தி மூலம் கதிர்காமம் சென்றபோது வீரகுமார் வேறொரு உலங்குவானூர்தி

(04ஆம் பக்கம் பார்க்க)

# கொக்குவில் இந்துவின்

# படிப்பினைத் தரும் கல்விக் கண்காட்சி

வியப்பாகத்தான் இருந்தது. கல்விக் கண்காட்சிக்கு இவ்வளவு கூட்டமா என்று. தலைநிமிர்ந்து நிற்கின்ற கொக்குவில் இந்துக்கல்லூரி பிரதான மாடிக் கட்டடத்தில் பாடசாலைக் கலைத்திட்டத்தோடு சம்பந்தப்பட்ட கண்காட்சி அது முதலில் கல்லூரி அதிபர் திரு. இ. மகேந்திரனை அவர் அறையில் சந்தித்தபோது 'இன்றைய கல்விச் சூழலில் ஆசிரியர்களின் வழிகாட்டலில் மாணவர்கள் சுதந்திரமாய் தன்னிச்சையாய் காட்சிப் பொருள்களை உருவாக்கியுள்ளார்கள். கண்காட்சியை 'பிரிஸ்டல்போட் கண்காட்சி' யாக்காமல் பார்த்துக் கொண்டால் போதும் என்று அறிவுரை கூறியிருந்தேன்'' என்று தனது வழக்கமான சிரிப்புடன் விளக்கம் தந்தார்.

கண்காட்சியைப் பார்க்க வாய்ப்பளித்து ஏற்பாடு செய்து தந்தார் அதிபர் இரசாயனப் பிரிவில் காட்சிப் பொருள்களைப் பிள்ளைகள் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர். பாடத்தோடு தொடர்பான கருவிகள், உபகரணங்கள், மூலகங்கள் என்று காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. புறத்திலிருந்த மின்பிறப்பாக்கியின் ஒலிக்கிடையிலும் காட்சிப் பொருள்களுக்கு விளக்கம் தரும் மாணவரின் ஆற்றல் தடைபடவில்லை.

பாடத்தோடு மட்டும்நின்று சூழலோடு அன்னியப்படாமல் கற்பக தருவான பனையின் பயன்பாட்டை விளக்கும் முயற்சி மகிழ்ச்சி தருவதாக இருந்தது. பனம் பாணி (பாகு), வெல்லம், பனஞ்சீனி, கற்கண்டு ஆகியவற்றை அடிப்படையான கருவிகளைக் கொண்டு நிதர்சனமாகச் செய்து காண்பித்தார்கள். எமது பிரதேசத்தின் தொழில் மரபைப் பேணி பன்னெடுங் காலமாகச் செய்யப்படும் தொழில்களில் ஒன்றான சவர்க்காரத் தொழிலை உரிய கோணத்தில் காட்டினார்கள். இந்தத் தொழில் நுட்பங்கள் பிள்ளைகளின மனதில நம்பிக்கைக்கு வித்திடும் என்று எதிர்பார்க்கலாம்.

அருகில் மனையியல் கூடம் மாணவிகளின் கைவண்ணத்தில் விதவிதமான ஆடைகளும், விதவிதமான பூக்களும காட்சியாகி அவற்றைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வமிகுதியுடன் மாணவிகள் மொய்த்து நிற்கின்றனர். வழக்கமாயிருக்கும் பாதுகாப்பு அதற்குத் தடையாக இருந்தது. கழிவுப் பொருள்களால் ஆக்கப்பட்ட கைவினைப் பொருள்கள் இந்தப் பகுதியில் சிறப்பு அம்சம். கழித்துவிடப்பட்ட மரக்கட்டை சிரட்டை, கடதாசி போன்றவற்றைக் கொண்டு பல வடிவமைப்புகளில் பூஜாடிகள், பூக்கள் மற்றும் இன்னோரன்ன பொருள்கள் உருவாக்கப்பட்டிருந்தன. மாணவிகள் பாடசாலையை விட்டு விலகிய பிறகும் பண மதிப்பிற்குரிய பயனுள்ள தொழிலாக இதனை மாற்றிக் கொள்ள முடியும் என்பதை இந்தப் பொருள்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

இந்தப் பகுதியில் வித்தியாசமான ஒரு விஷயம் தின்பண்டங்கள். கருத்தரங்குகளிலும், கூட்டங்களிலும் சத்துணவைப் பற்றிக் கொஞ்சம் பேசக் கேட்டிருக்கிறோம். ஆனால் இங்கு ஒரே வரிசையில் தேர்ந்தெடுத்த சுமார் இருபத்தி நான்கு தின்பண்டங்களைப் பார்க்க ஒரு அருமையான சந்தர்ப்பம் சத்துணவு வகைகளுடன் கரட்ரொபி, பீற்றூட்ரொபி என்று தித்திக்கும் தின்பண்டங்கள். பழந்தமிழரின் உணவுப் பழக்கத்தை நவீனப்படுத்துகிறாற் போல் குரக்கன் மாகேக், கப்புமாவில் மரக்கறிபிட்ட பிட்டு ஆகியன அமைந்துள்ளன.

கண்காட்சி நிரலில் அமைந்திருக்கும் மற்றொரு காட்சி அறை இந்து நாகரிகத்துறை இங்கு பெரும்பாலான வரலாற்றுப் பதிவுகளை இயன்ற வரை சுருக்கிக் கூற முயன்றுள்ளார்கள். மூல வடிவிலுள்ள இந்து நாகரீகம் சார்ந்த சில பதுமைகளுக்கு மண் வடிவம் கொடுத்திருக்கிறார்கள். மொகஞ்சதாரோ தாடியுடைய மனிதனின் பதுமையை சுண்ணாம்பில் செய்திருப்பது பாராட்டத்தக்கது.

ஏதாவது புதுமையாகச் செய்யலாம் என்பதல் ஒரு சின்ன எதிர்பார்ப்புஎமக்கு இருந்தது. எமது எதிர்பார்ப்பைப்பூர்த்தி செய்வது போல் காட்சிப் பொருள்கள் அமைந்திருந்தன. முன்பெல்லாம் இப்பகுதிகளில் பிரிஸ்டல்போட் அதிகம் இருக்கும். இங்கு அதற்கான தேவையே இல்லாமல் செய்துவிட்டார்கள். சூழ்நிலைகள், தேவைகள் கருதி ஆண்டு 6முதல் ஆண்டு 7வரை பயன்படக்கூடிய திண்ம உருவங்கள் மற்றும் பாடத்திட்டத்தில் ஏ எல். வரை இடம்பெற்றுள்ள கோணமானி, எண்சட்டம் இன்னும் பல உருவங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. மிகப் பொருத்தமாய்த் தயாரிக்கப்பட்ட இந்தக் கற்பித்தல் உபகரணங்களால் ஆசிரியர்களும், மாணவர்களும் பயனடைவார்கள் என்பது

> கொக்குவில் இந்துக் கல்லூரியின் கல்விக் கண்காட்சி ஜூலை 6,7,8 9 ஆம் திகதிகளில் நடந்தேறியது. இக்கண்காட்சி பற்றிய ஒரு மதிப்பீடு இது.
>
> **மதன்**

தேன்வதை மற்றும் கடதாசிக் கூழ் கொண்டு ஆக்கப்பட்ட சதிவடிவம், ஆண்டு 12 மாணவன் சு. சஜன் வாழைநாரினால் அமைத்துள்ளபடம், 7 ஆம் ஆண்டு மாணவன் சிறி ச. சிகாந்தின் கைவண்ணத்தில் ஐந்து சதக் குத்திகளினால் உருவாக்கப்பட்ட சித்திரத் தேர் பாராட்டத்தக்கன. மாணவர்கள் ஒருபடி மேல் போய் - யாழ்ப்பாணத்தில் தனி நபருக்குச் சொந்தமான காணியில் வளரும் சந்தனமரத்தின் கட்டையைப் பார்வைக்கு வைத்துள்ளார்கள்.

அடுத்தது - ஆங்கிலம், தமிழும். மொழிகள் என்பதால் இரண்டையும் ஒன்றாக்கிவிட முடியாது ஒன்று இரண்டாம்மொழி. மற்றது அன்னை மொழி

ஆங்கிலப் பிரிவுக்கு வழமையான சோபைகள் சேர்ந்திருக்கின்றன. சுமார் இருபத்தெட்டுப் படங்களும், உருவங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன இனி பொம்மைகள் நான்கு அல்லது ஐந்து வெவ்வேறு வகையான ஆடைகளுடன் 'கொலு' இருக்கின்றன. இவ்வளவு கோஷ்டியும் டிசைனும் (Costume design) அன்னிய உடை வடிவங்கள் என்ற எண்ணக் கருவைத் தோற்றுவிக்குமா?

தமிழ் பகுதியில் வெவ்வேறு வகுப்புகள் உருவாக்கிய இருபத்தைந்து கையெழுத்துச் சஞ்சிகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சஞ்சிகைகள் மாணவர்களின் அனுபவத்திறத்தும், படைப்புக்குமான பாலமாக அமைந்துள்ளன. ஏடுகள், சஞ்சிகைகள், பழம் நூல்கள், சாஸனங்கள் ஆகியவற்றை மையப்படுத்தியிருந்தால் ஒரே இடத்தில் எல்லாவற்றையும் பார்க்கும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைத்திருக்கும். தமிழ்நாடு சார்ந்த பல படங்களைச் சிறி சிரமத்தோடு பார்வைக்கு வைத்திருக்கிறார்கள். இது 'நான் செய்ய நினைத்ததை எல்லாம் அவர் செய்துவிட்டார்' என்று தமிழ் மொழி ஆசிரியரைப் பார்த்து ஓவிய ஆசிரியர் அங்கலாய்ப்பது போல் உள்ளது.


கல்விக்கண்காட்சி என்று கல்லூரி நிர்வாகம் அறிவித்ததற்கு இணங்க கணிதப்பகுதி

குறிப்பிடத்தக்கது.

உயிரியல் விஞ்ஞானப் பகுதியில் பார்ப்பதற்கு அமைதியாகவும், படிப்பில் ஆர்வம் ஏற்படுத்தும் வகையிலும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த பல காட்சிப் பொருள்களைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது தீர்க்க தரிசனத்துடன், இப்போது தோன்றியிருக்கும் எயிட்ஸ் நோயைப் பற்றி மாணவர் விளக்கம் தருவது மனதை நெகிழவைக்கிறது. நெடுநாள் ஏக்கமான புற்றுநோயைப் பற்றியும் தரவுகளுடன் விளக்கம் தரப்படுகின்றது. இதெல்லாம் முடிந்தபிறகு 1996 ஏ எல் பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படும் பரிசோதனைக் குழாய்க் குழந்தை குறித்து உற்சாகத்தோடு இப்போதே அசை போடுகிறார்கள். எதிர்காலத்தைப்பற்றிய ஆர்வம் வரவேற்கத் தக்கது.

வர்த்தகவியல் பகுதியில் மாதிரி வங்கி ஒன்றைத்திறந்து அதன் மூலம் வங்கிநடைமுறைகளை அறிமுகப்படுத்தி வங்கித் தொழிற்பாடுகள் பற்றிய எண்ணக்கருவை மாணவர்கள் மத்தியில் வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சில அனர்த்தங்களால் கிராமப்புறங்களை விட்டு வெளியேறும் மக்கள் நகரங்களுக்குச் சென்று கூலி வேலையாட்களாக மாறிவிடுகின்றனர். இதனைத் தடுக்கும் வாய்ப்புகளைக் கொண்டது தொழிற்பேட்டை. இந்த உண்மையை உணர்த்தும் வகையில் ஒரு மாதிரிக் கைத்தொழிற்பேட்டையை உருவாக்கியுள்ளார்கள். 12D மாணவி எஸ். சுபாசினி 36 நாடுகளின் நாணயங்களைக் காட்சிப்படுத்தியிருப்பது ஒரே இடத்தில் பல நாடுகளின் நாணயங்களைப் பார்க்கும் அருமையான ஒரு வாய்ப்பைத் தருகிறது மொழிச் சீர்திருந்த புதிய தமிழ் விசைப்பலகை அமைப்பு (கடமெழுந்து) மாணவர்களுக்கு ஒரு புதிய அனுபவம்.

கண்காட்சியின் மையப்பகுதியில் இசையும் நிருத்தியமும் கங்கையும் ஜமுனையும் போல் ஒரே இடத்தில் சங்கமமாகின்றன அந்த மரபு ரீதியான தோல், துளை, நரம்புக் கருவிகளைக் காட்டினார்கள் யாழ்ப்பாணத்தில் சில நிகழ்ச்சிகளில் பாவிக்கப்படும் கெண்டையையும் வைத்திருந்



தால் இசை - பரத மாணவ மாணவிகளுக்கு ஒரு பயன் பொருத்தமான அனுபவமாக அமைந்திருக்கும். இப்பகுதியில் எல்லோர் மனதிலும் பட்ட (கண்களில் படாத) நெருடலான ஒரு விஷயம் எங்கள் மரபுவழி வந்த இசைக் கருவியான பறைமேளம் அங்கு இல்லாததுதான்.

அடுத்தது ஓவியக்கண்காட்சி. பாடத்திட்டத்தோடு கூடிய சில வடிவ அமைப்புகள் காணப்பட்டன. அற்புதமான படங்களும் வரையப்பட்டிருந்தன. பொலனறுவைப் புத்தரின் பரிநிருவாணம், சிகிரியா குகை ஓவியம், பொலனறுவைச் சிவன் கோயில், தாதுகோபுரம், ஈஸ்வருமுனியா ஆகியவற்றின் மாதிரி உருவங்களைக் காணக்கூடியதாக இருந்தது. நம் முன்னோர் அருளிச்செய்த அருஞ்செல்வங்களான திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியன பற்றிய எண்ணக்கருவை ஏற்படுத்தக் கூடிய பதிவுகள் காணப்படவில்லை கலைக்கு எல்லை இல்லை என்றாலும் எமது பண்பாட்டில் நாம் இறு

(மேலதிக இணைப்பு 1 இல் பார்க்க)


Computer Programming in BASIC Language

**4 MONTHS**

திங்கள், புதன் வகுப்புகள்

ஆரம்பம்: ***19-07-1993***

8-30 மணி

Lectures By: S. P. SIVAPATHASUNDARAM, M. I. D. P. M, (Lond.)

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
★ கட்டணம் மாதம் ரூ 400/- மட்டுமே.

G. I. M. A., I. A. B., LOTUS 1-2-3
SHORT - HAND & TYPING
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**School of Business Administration**

(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.

(சி-7017)



**பாண் தயாரிப்பாளர் தேவை**

வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்தால் நடாத்தவுள்ள பாண் பேக்கரிக்கு தரமான பாண் தயாரிக்கக் கூடிய பாண் தயாரிப்பாளர் தேவை. சம்பளம், கொடுப்பனவுகள் பற்றி நேரில் பேசித் தீர்க்கப்படும். விண்ணப்பங்களை தலைவர், வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம், மருதங்கேணி என்ற விலாசத்திற்கு 24-07-93க்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்.

*(5383)*

# தமிழர் தேசிய இனப் பிரச்சினை; தெரிவுக் குழுவிடம் இருந்து 'தேசிய அரசிடம்'

தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை வழங்கும் பொறுப்பை பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் இருந்து தாம் புதிதாக உருவாக்க எண்ணியுள்ள 'தேசிய அரசிடம்' ஒப்படைக்க அரசாங்கம் திட்டமிடுவதாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகின்றது அதாவது. தோல்வி கண்டு விட்ட தெரிவுக்குழுவின் இடத்தை 'தேசிய அரசு' மூலம் நிரப்புவதற்கு முயற்சிக்கப்படுவதாகக் கருதப்படுகின்றது.

1991ஆம் ஆண்டு எதிர்க்கட்சி உறுப்பினரான மங்கள முனசிங்கா கொண்டுவந்த பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிகும் திட்டத்தை அன்றைய அவலநிலையில் அரசாங்கம் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. சுமார் இரண்டு வருட காலமாக இடம்பெற்று வந்த சர்வகட்சி மாநாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எதுவும் காணப்படாது சர்வகட்சி மாநாடுகள் செயலிழந்து கொண்டிருந்த நிலையிலேயே அதில் இருந்து பிரச்சினையை தெரிவுக்குழுவிடம் அரசாங்கம் மாற்றியது.

இன்றும், ஏறத்தாழ அதை ஒத்த நிலையே காணப்படுகின்றது சுமார் இரண்டு வருடங்கள் பணத்தையும், பலரது நேரத்தையும் வீணடித்த பாராளுமன்றத் தெரிவுக்குழு, அரசியற்தீர்வு குறித்து எதுவித முன்னேற்றமுமின்றி அதே வேளை நகரமுடியாத நிலை இன்று எட்டியுள்ளது.

தெரிவுக்குழுவில் இருந்து ஏற்கனவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ், கொழும்பில் தங்குமிட அரசியல் நடத்தும் தமிழ்க்குழுக்கள்பகிஷ்கரித்து வருகின்றன. இவர்களின் பகிஷ்கரிப்பானது பாராளுமன்றத் தெரிவுக்குழுவை ஏற்கனவே சிங்களத் தெரிவுக்குழு ஆக்கியிருந்தது.

அதிலும், இறுதியாககடந்த ஆறாம் திகதி இடம்பெற்ற பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் சுதந்திரக்கட்சியும் தனது பங்களிப்பைச் செய்யவில்லை. சுதந்திரக் கட்சியின் செயலாளரான தர்மசிறி ''நாங்கள் இப் பொழுது பார்வையாளர்களாகவே அங்கம் வகிக்கின்றோம்'' என்றார். இந்நிலையும் எவ்வளவு காலத்திற்குத் தொடரும் என்பதும் கேள்விக்குரியதாகவே உள்ளது. இந்நிலையில் தெரிவுக்குழுவில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும், தினேஷ் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணியுமே எஞ்சியுள்ளன.

மேலும், தெரிவுக்குழுவின் இறுதி அறிவிப்பான கிழக்கு மாகாணத்தில் கருத்துக்கணிப்பு என்பதும் நடைமுறை சாத்தியமற்றது என்ற நிலையில் இக் குழுவின் நிலையே பெரும் கேள்விக்குரியதாகியுள்ளது. இதனை இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தைதயாரிக்கவென நியமனம் பெற்ற தெரிவுக்குழு உள்ளூராட்சி தேர்தலை பற்றி பரிசீலித்ததில் இருந்தே புரிந்துகொள்ளலாம்.

திரு பிரேமதாசாவின் மரணத்தின் பின்னர் வடக்கு - கிழக்கு மாகாண இணைப்புக் குறித்து கிழக்கு மாகாணத்தில் ஒரு கருத்துக் கணிப்பு நடத்துவதன் மூலம் ஓர் அரசியல் ரீதியான நகர்ச்சியை மேற்கொள்ள டி. பி. விஜயதுங்காவின் அரசாங்கம் எண்ணியது. இதன் பிரகாரமே கடந்த மாதம் கிழக்கு மாகாணத்தில் கருத்துக் கணிப்பு நடத்துவது தொடர்பான பேச்சுகள் தெரிவுக்குழு வட்டாரங்களில் இருந்து வெளிவந்தன. இது பெரும்பாலும் அரசாங்க வட்டாரத்தின் குரலாகவே இருந்தது. 1987ஆம் ஆண்டு இந்திய சிறிலங்காஉடன்பாட்டை அடியொற்றி எடுக்கப்பட்ட இம் முடிவானது புதிய அரசியலில் முன்னாள் அதிகார பீடத்தின் செல்வாக்கும், இந்தியாவை அனுசரித்துப் போதல் என்ற கொள்கையின் அடிப்படையிலும் மேற்கொள்ளப் பட்ட முயற்சியாகும்.

இவ் அறிவிப்பைத் தொடர்ந்து இராணுவ வட்டாரங்களும் கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்த முடியும் எனத் தெரிவித்தன. கிழக்கு மாகாண இராணுவ தளபதி பிரிகேடியர் லக்கி அல்கம வடக்கு கிழக்கு மாகாண இணைப்புத் தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் எந்நேரத்திலும் சர்வசன வாக்கொடுப்பு நடத்துவதற்குரிய ஒழுங்குகளைச் செய்வதற்கு பாதுகாப்புப் படையினர் தயாராகவுள்ளனர்'' எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் இறுதியாக நடந்த தெரிவுக்குழு கூட்டத்திற்கு பாதுகாப்பு அதிகாரிகளும் அழைக்கப்பட்டிருந்தனர். அதன் அடிப்படையில், கூட்டுப்படை நடவடிக்கை தலைமை தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னா உட்பட பல பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில், கிழக்கு மாகாணத்தில் ஒரு தேர்தல் நடத்துவதற்கு உரிய சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதற்கு நான்கு ஐந்து மாதங்களுக்குள் உருவாக்கலாம் எனப் பாதுகாப்பு அதிகாரிகள் உறுதி கூறினர்.

இருப்பினும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் கருத்துக் கணிப்பு குறித்து ஒரு முடிவிற்கு வரமுடியவில்லை. கருத்துக் கணிப்பு திட்டத்தையே தெரிவுக்குழு காலவரையறையற்றநிலையில்ஒத்திவைத்தது. பெரும்பாலும், தெரிவுக்குழுவின் கருத்துக் கணிப்பறியும் திட்டமானது ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

தெரிவுக்குழுவின் இக்கருத்துக் கணிப்பறியும் திட்டம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டமைக்கு பல காரணங்கள் சுட்டிக்காட்டப்படக் கூடியன இதில் முதலாவதானதும், முக்கியமானதும், இராணுவத்தரப்பு ஆரம்பத்தில் தெரிவித்தது போன்று கிழக்கு மாகாணத்தில் உடனடியாகத் தேர்

**-ஜெயராஜ்-**

தல் நடத்தக்கூடிய விதத்தில் கிழக்குமாகாணம் இராணுவத்தின்பூரணபிடியில்இல்லை என்பது. இதனைத் தெரிவுக்குழுவின் கூட்டத்தில் இராணுவ தரப்பு ஓரளவு ஏற்றுக் கொண்டும் உள்ளது. நான்கு ஐந்து மாதங்களில் சூழ்நிலையை உருவாக்கலாம் என்பது அவர்களின் எதிர்வு கூறலே ஒழிய திடமான முடிவொன்றல்ல.

இருப்பினும் இராணுவத்தரப்பு நான்கு ஐந்து மாதத்திற்குப் பின்னர் புலிகளை கிழக்கில் இருந்து அப்புறப்படுத்த முடியும் என தெரிவித்த போதும் - வெற்றி அளிக்குமா என்பது வேறு விடயம் - கிழக்கில நடத்தும் கருத்துக் கணிப்பை காலவரையறையின்றி ஒத்தி வைத்தமைக்கு மேலும் காரணங்கள் சில உள்ளன.

இவ்விடயத்தில் முஸ்லிம் தலைவர்களிடம் இருந்த தடுமாற்றம் அரசாங்கத்திற்கு தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளமுடியாதநிலையைஉருவாக்கியது அதிலும் அரசாங்கக் கட்சியில் உள்ள அமைச்சர் ஹமித்போன்றவர்களின் கருத்துக்கணிப்பை கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்க முடியாது என்ற நிலைப்பாடானது அரசிற்கு சங்கடத்தை ஏற்படுத்தியதெனலாம். இதனால் முஸ்லிங்களின் முழுமையான ஆதரவோடு கிழக்கை வடக்கில் இருந்து கருத்துக் கணிப்பின் மூலம் துண்டாடிவிடலாம் என்ற அரசின் திட்டம் கேள்விக்குரிய தொன்றாகியது.

அடுத்ததாக எந்த ஒருதமிழ் குழுக்களின்ஆதரவைத்தானும் பெற்றுக் கொள்ள முடியாமையானது அரசாங்கததின் இனப்பிரச்சினை குறித்ததீர்வானது ஒருதலைப் பட்சமானதுஎன்ற நிலையைஉருவாக்குவதினால், கிழக்கில் நடத்தப்படும் கருத்துக் கணிப்பை தமிழர் தரப்பில் எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற நிலையில் அரசைப் பொறுத்து பெரும் பின்னடைவாகும். அது உலகில் ஏற்புடைய ஒன்றாகக் கணிப்பிடப்படவும் மாட்டாது.

இவற்றைவிட சுதந்திரக் கட்சியும், தெரிவுக் குழுவும் ஒரு பார்வையாளனாகமாறிவிட்ட நிலையில். கருத்துக் கணிப்பு சிலவேளை ஐ. தே. க. அரசு எதிர்பார்ப்பதற்கு மாறாகத் தோல்வி அடையுமானால், கிழக்கைத் தமிழருக்குத்தாரை வார்த்து விட்டது என்ற குற்றச்சாட்டிற்கு ஐ. தே. க தனியாகவே பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிவிடும்.

இவ்வாறான பல காரணங்கள் தெரிவுக் குழுவின் இறுதி முயற்சியையும் முறியடித்தது எனலாம். இந் நிலையில் இம் மாதம் 24ஆம் திகதி கூடுவதாக உள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் எந்தக்கட்சிகள் பங்குபற்றும் என்பதையே அறுதியிட்டுக் கூற முடியாத நிலையில் தனது இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. இந் நிலையிலேயே தெரிவுக்குழுவிடம் இருந்து அதற்கு மாற்றீடாக இனப்பிரச்சினையை 'தேசிய அரசு' ஒன்றிடம் ஒப்படைக்க அரசாங்கம் முயற்சிப்பதுபோல் உள்ளது.

ஆனால் 'தேசிய அரசு' என்பது எந்தளவிற்குச் சாத்தியமானது. இனப்பிரச்சினை குறித்து தேசிய அரசால் எந்தளவிற்கு முன்னேற முடியும் என்பதில் பெரும் சந்தேகங்கள், கேள்விகள் எழுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. ஏனெனில் சர்வகட்சி மாநாடு - பாராளுமன்றத் தெரிவுக்குழு - தேசிய அரசு - எனப் பதங்கள் மாறலாம், ஆனால், அதிகாரத்தில் உள்ளவர்களோ அன்றி அவர்களின் சிந்தனைகளோ மாற்றம்பெற்றுவிட்டதாக இல்லை. இதனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு எதையும் தேசியஅரசு எட்டிவிட வாய்ப்பு எதுவும் இல்லை.

மாறாக தேசிய அரசிற்கு இப்பொழுதே பிரதானஎதிர்க்கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இந் நிலையில், தேசிய அரசு என்பது ஒன்று சிறிலங்காவில் சாத்தியமாகுமா என்பதே கேள்விக்குரியதாகும்.

இருப்பினும் 'தேசிய அரசு' என்ற பெயரில் சில கட்சிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஓர் கூட்டு அரசாங்கத்தை அமைக்குமானால் அரசியல் ரீதியான தீர்விற்கு தேசிய அரசு தயாராக இல்லாத நிலையில் ஓர் இராணுவத் தீர்வை அதனால் கண்டுவிட முடியுமா? அதாவது சதாபோரிட்டுக் கொண்டிருக்கும் இராணுவம் புலிகளை வெற்றிபெற தனது பலத்தைவிட அரசியல் வாதிகளின் பலத்தில் போரிட்டு வெற்றிபெற்று விடுமா? அவ்வாறானால் இராணுவத்திற்கு தளபாடங்களை சேகரிப்பதைவிட அரசியல் வாதிகளைச் சேர்த்துக்கொள்ளுதல் நன்மை பயக்கக்கூடும்.

## போசாக்கு பராமரிப்பு நிலையம் திறப்பு

(அரியாலை)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இருக்கும் ஒருவயது தொடக்கம் நான்குவயது வரையுள்ள போசாக்கற்ற குழந்தைகளுக்கான போசாக்கு நிலையம் ஒன்று ''சிறுவர் போசாக்கு பராமரிப்புபூங்கா'' என்ற பெயரில் நேற்று முற்பகல் 10-45 மணிக்கு மேற்படி குடியிருப்பில் திறந்துவைக்கப்பட்டது.

தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. செம்மணன் அவர்கள் தலைமை வகித்த இந்நிகழ்வில், தீவக மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி நாமகள் அவர்கள் மங்கள விளக்கேற்றி வைக்க யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திரு. இளம்பரிதிஅவர்கள் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். யாழ். மாவட்ட போசாக்குப் பிரிவு பொறுப்பாளர் திரு. சுது அவர்கள் போசாக்கு நிலைய பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தார். யாழ். மாவட்ட தளபதி திரு. அன்பு அவர்கள் போசாக்கு நிலையத்தைத் திறந்துவைத்தார். (90)

### போட்டிகள்

கொக்குவில் இளைஞர் சங்கமும், மனோன்மணி சனசமூக நிலையமும் யாழ். தேசிய சர்வோதயத்தின் ஆதரவுடன் நடத்தும் மனோன்மணி பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிகள் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 00மணியளவில் சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் அ. இராசையா தலைமையில் நடைபெறவுள்ளது. [41]

இடம்பெயர்ந்த தீவக மக்களுக்கான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் இன்றும் நாளையும் யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவ் விளையாட்டுப் போட்டிகளில் தீவகத்தை சேர்ந்த பல விளையாட்டுக் கழகங்களும் பங்கு பற்றவுள்ளன.

## ஜெயலலிதாவுக்கு எதிரான மனு 19-ல் விசாரணை

(சென்னை)

செல்வி ஜெயலலிதா உரிமையாளராக உள்ள ஒரு நாளிதழில் தமிழக அரசு விளம்பரம் கொடுக்கப்பட்டது தொடர்பாகவும், ஜெயலலிதா பங்குதாரராக உள்ள ஒரு நிறுவனத்தில் தமிழக அரசு ஆவணங்கள் சில அச்சிடப்பட்டது தொடர்பாகவும், அவர் சட்டப்பேரவை உறுப்பினர் பதவி வகிக்க தகுதியற்றவர் ஆகிவிட்டார் என்று அறிவிக்கக்கோரும் மனுவொன்றை ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி உச்சநீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளார்.

டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தாக்கல் செய்துள்ள றிட் மனு இம்மாதம் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

## உலர் உணவு விநியோகம் இன்றுமுதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தவர்களுக்கான கடந்த ஜூன் மாதத்திற்குரிய நான்கு வாரங்களிற்குமான இலவச உலர் உணவு விநியோகம் நிவாரண முத்திரைகள் இன்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஏற்கனவே விநியோகிக்கப்பட்ட உலர் உணவு முத்திரைகளின் அடிக்கட்டையைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. (பா) (தி)

**கட்சிக்கு**

இதேவேளை கட்சி உறுப்பினர்களின் வற்புறுத்தலின் மத்தியிலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். கரையோரம்

தாக்குதலும் யாழ். கரையோரங்களை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினரால்மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

சுமார் ஒரு மணிநேரமாக எறிகணை வீச்சாலும் துப்பாக்கிப் பிரயோகத்தாலும் யாழ். நகரம் அதிர்ந்தது

சுமார் ஒருமணிநேரம் இடம்பெற்ற இச்சம்பவத்தினால் கரையோரப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்துபாதுகாப்பான பகுதிகளுக்குச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

# NIGHT HAWKS

## (இரவுப் பருந்துகள்)

(தமிழ் விளக்கம்)

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

(சி/6959) மாலை 4.00 மணி, 6.00 மணி


## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 22-10-1966

உதிர்வு: 16-06-1993

''ஆலசக் கலைமணி, சங்கீத கலா வித்தகி''

அமரர்

### செல்வி ஞானாம்பிகை சின்னத்தம்பி


(இசையாசிரியை யா/இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை, யா/நாவற்காடு கணபதிபபிள்ளை வித்தியாலயம்)

விடுதலை நோக்கிய தமிழீழ பாதையில்
இனிமைகள் சேர்க்கின்ற கலைஞரில் ஒருமலர்
சடுதியில் உதிர்ந்தது; தாங்கொணாத் துயரினில்
பொருமினோம்; ஆயினும் பெருமையை
நினைக்கிறோம்.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு,
தென்மராட்சிக் கோட்டம்.

(5396)

## 6-ம் மாத நினைவுகள்



### கேணல் கிட்டு

(திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார்)

| தாயின் மடியில் மலராய் | ஆழ்கடலில் வித்தாய் |
|---|---|
| 02 - 01 - 1960 | 16 - 01 - 1993 |

தமிழீழ மூச்சாய் தலைவன் வழி நடந்தாய்
உன் வழியில் ஆயிரம் ஆயிரம் வேங்கைகள் மலர்வர்

வேம்படி,
வல்வெட்டித்துறை. (5392)

உன் நினைவோடு
குடும்பத்தினர்

### சட்டத்தரணிகளுக்கான கலந்துரையாடல்

''யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த (வலிகாமம், வடமராட்சி - தென்மராட்சி) சட்டத்தரணிகளையும், சட்ட அறிஞர்களையும் சந்தித்து கலந்துரையாடுவதற்காக 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே குறிப்பிடப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து சட்டத்தரணிகள், சட்ட அறிஞர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

### செப்டெம்பரில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மாகாண அரசாங்க சேவையின் பொது எழுதுநர் சேவை IIஆம் வகுப்பின் ''அ'' பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான ''வினைத்திறமை காண் பரீட்சை - 1993'' எதிர்வரும் செப்டெம்பர் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிடபவர்கள் இம்மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

### கருத்தரங்கு

கடந்த 12ஆம் திகதி முதல் தகுதியான நிறுவனங்களுடன் இணைந்து நடாத்தப்பட்டு வரும் குறுகிய கால விவசாய பயிற்சிநெறியில் விசேட கருத்தரங்குகளை தினமும் மாலை 3.30 மணியளவில் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தின் விரிவுரை மண்டபத்தில் நடாத்துவதற்கான ஒழுங்குகளை தமிமீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக இன்று ''தமிழீழ விவசாயத் துறையினது வளர்ச்சியினைத் தூண்டும் அறுவடை பதனிடுதல களஞ்சியப்படுத்தல்'' என்ற தலைப்பில் நடைபெற உள்ளது.

ஆர்வமுடைய சகலரையும் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாணவரவையின் அனுசரணையுடன் நாளை இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் திருமலை, மட்டு, அம்பாறை மாவட்ட மாணவர்களையும் ஏனைய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களின் தலைவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு திருமலை, மட்டு. அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றிய தலைவர்கள் கேட்டுள்ளனர்.

### மக்களிடம்

உறுப்பினர்களுள் 42பேரின் ஆதரவு இருப்பதாக தெரிவித்த அவர், சிறிமாவோ பண்டார நாயக்காவின் எதிரான குற்றச்சாட்டுகளை தான் பாராளுமன்றத்தில் முன்வைக்கப் போவதாக தெரிவித்தார்.

### இவ்வருட

ஆரம்ப கல்வி ஆசிரியர்களும் நியமிக்கப்படுவர். பொது உளச்சார்பு பரீட்சை அடிப்படையில் இவர்கள்தெரிவாவர் என கல்விச் சேவைகள் சபை அறிவித்துள்ளது.

பாடசாலை அதிபர்களின் பொறுப்புக்களைக் கவனிக்க நியமிக்கப்பட்ட 2000 ஆசிரியர்களை நிரந்தர அதிபர்களாக நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஜூன் முதலாம் திகதி வரை ஒரு வருட பணியை பூர்த்தி செய்த பதில் அதிபர்கள் இந்த நிரந்தர நியமனம் பெற முடியும்.

## க. பொ. த. (உ/த) பரீட்சை -1993

### நேர அட்டவணை

| | முற்பகல் | பிற்பகல் |
|---|---|---|
| 02-08-93 திங்கள் | விலங்கியல் I, பிரயோக கணிதம் I, சரித்திரம் II | சரித்திரம் I |
| 03-08-93 செவ். | பிரயோக கணிதம் II, விலங்கியல் II, கிரேக்க உரோம நாகரிகம் I, சித்திரம் I | மனைப்பொருளியல் I |
| 04-08-93 புதன் | தூயகணிதம் I | மனைப்பொருளியல் II |
| 05-08-93 வியா. | தாவரவியல் I, தமிழ் I | தூயகணிதம் II |
| 06-08-93 வெள். | தாவரவியல் II, தமிழ் II | கர்நாடக சங்கீதம் I, மேலைத்தேய சங்கீதம் I |
| 07-08-93 சனி | இரசாயனவியல் I, பொருளியல் I | பரதநாட்டியம் I |
| 09-08-93 திங்கள் | இரசாயனவியல் II, பரதநாட்டியம் II | கர்நாடக சங்கீதம் II, மேலைத்தேய சங்கீதம் II |
| 10-08-93 செவ். | பௌதிகவியல் I, கணக்கியல் I | — |
| 11-08-93 புதன் | பௌதிகவியல் II, கணககியல் II | விவசாய விஞ்ஞானவியல் I, கிரேக்க உரோம நாகரிகம் II |
| 12-08-93 வியா. | பொருளியல் II | விவசாய விஞ்ஞானவியல் II |
| 13-08-93 வெள். | சித்திரம் II, ஆங்கிலம் I | இந்துசமயம் I, கிறிஸ்தவம் I, சமஸ்கிருதம் I |
| 14-08-93 சனி | — | இந்துசமயம் II, கிறிஸ்தவம் II, சமஸ்கிருதம் II |
| 16-08-93 திங்கள் | அரசியல் மூலதத்துவங்கள் I | வர்த்தகமும் நிதியும் I |
| 17-08-93 செவ். | புவியியல் I | வர்த்தகமும் நிதியும் II |
| 18-08-93 புதன் | புவியியல் II | இந்துநாகரிகம் I |
| 19-08-93 வியா. | புவியியல் III | இந்துநாகரிகம் II |
| 20-08-93 வெள். | சித்திரம் III, ஆங்கிலம் II | அளவையியலும் விஞ்ஞான முறையும் I |
| 21-08-93 சனி | அரசியல்மூலதத்துவங்கள் II | நாடகமும் அரங்கியலும் I |
| 23-08-93 திங்கள் | நாடகமும் அரங்கியலும் II | அளவையியலும் விஞ்ஞானமுறையும் II |
| 24-08-93 செவ். | நாடகமும் அரங்கியலும் III | — |

### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 15-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10387

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

40-4760, 24-9856, 41-9746, 26-4501, 27-6821
24-5437, 42-9326.

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுத்துரை அன்னலட்சுமி

கொக்குவில் கோணாவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பொன்னுத்துரை அன்னலட்சுமி நேற்று கொழும்பில் காலமாகிவிட்டார். குப்பிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட காலம் சென்ற பொன்னுத்துரையின் (முன்னாள் ஓவசியர், யாழ். அரசினர் வைத்தியசாலை) அன்பு மனைவியும், ஜெகதாம்பிகையம்மா, யோகநாதன் (வர்த்தக முகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம்), மல்லிகாதேவி (கல்விக்கந்தோர் - யாழ்ப்பாணம்), சுலோஜனா ஆகியோரின் அன்புத்தாயாரும், ஆறுமுகசாமி (சாலைப் பரிசோதகர் வ. பி. போ. ச. கோண்டாவில்), ரதிகா (ந. ப. நோ. கூ. சங்கம்), செல்வராசா (தொழிற்கந்தோர், கிளிநொச்சி), புஸ்பராசா (வர்த்தகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நந்தினி, கஜேந்திரன், தனேந்திரன், பார்த்திபன், துவாரகன், நிரோசன், சங்கீதா, ரயோசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலம் சென்றவர்களான அப்புத்துரை, முத்துத்தம்பி, இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜேஸ்வரியின் (கொழும்பு) மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று கொழும்பு கனத்தை மயானத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:

கோணாவளை லேன்,
கொக்குவில். (5397)

திருமதி ர. யோகநாதன்
மருமகள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.